87

"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி - 2017

## 40 ஆவது ஆண்டு நிறைவில்

## திருமணங்கள்



## 15.09.2017



ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S

CATERING

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|
|  |  |  |

திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா







ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton THISTLE HOTEL Holiday Inn

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180

mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 25

# கலசம்
# KALASAM

ஒலி 87

www.saivamunnettasangam.com

FREE ISSUE

கலசம்
நிருவாகக் குழு

ஆசிரியர்
க ஜெகதீஸ்வரன்

உதவி ஆசிரியர்கள்
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

விநியோகம்
சோ நிரஞ்சன்

விளம்பரம்
தொடர்புகள்
மா இந்துசேகரன்

நிருவாகம்
வ இ இராமநாதன்

வெளியீடு
சைவ முன்னேற்றச்
சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

மின்னஞ்சல்
email:
smsukkalasam@gmail.com

## சஷ்டி விரதமும் சஷ்டி கவசமும்

**திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்** பிரபலமான சமயச் சொற்பொழிவாளராக இருந்த காலம் அது. ஈழத்திலுள்ள கோயில்களில் திருவிழாக் காலங்களில் சொற்பொழிவுக்கென அவரை அடிக்கடி அழைப்பார்கள். வாரியாரின் சொற்பொழிவு கேட்கவென்றே ஒரு பெரிய கூட்டம் கூடும். பெரியவர், சிறியவர், பண்டிதர், பாமரர் என எல்லோருக்கும் புரியும் வண்ணம் சொற்பொழிவு ஆற்றுவதில் அவருக்கு நிகர் அவரேதான். என் தந்தையார் வாரியாரின் சொற்பொழிவுகளைத் தவறாது கேட்பவர்; எங்களையும் அழைத்துச் செல்வார். வீட்டுக்குத் திரும்பி வந்ததும் சொற்பொழிவின் பிழிவு மீண்டும் அசைபோடப்படும்.

அப்படியொரு பேச்சிலேதான் வாரியார் சுவாமிகள் பேசிய விடயம் என் தந்தையாருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. தன் கருத்தை வாரியார் சுவாமிகள் பிரதிபலித்தார் என்பதே தந்தையாரின் மகிழ்ச்சிக்குக் காரணம். அந்த விடயம், **கந்தசஷ்டி கவசம் பாடுவது தவறு என்பதுதான்.** ஏன் பாடுவது தவறு என்ற கேள்விக்கு வாரியார் சுவாமிகள் சொன்ன பதிலின் சாரம்:
உடல் உறுப்புக்களைப் பாதுகாக்க வேண்டும் எனக் கோரும் காக்க காக்க என்ற வரிகள், குத்து குத்து கூரியவேலால் என்ற வரி, வாய்விட்டு அலறிட மதிகெட்டு ஓட என்ற வரி, என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோட என்பனபோன்ற வேறும் பல வரிகள் நம் சைவசமயக் கொள்கைக்கு முரணானவை என்பதாகும்.

ஆன்ம ஈடேற்றத்தை வேண்டி வழிபடுதல், பிறப்பை ஒழிக்க வேண்டுதல் என்பனவன்றி, பேய், பூதங்களை விரட்டவும், பகைவனைக் கொல்லவும் நாம் இறைவனை வேண்டி வழிபடும் வழக்கம் இல்லை என்பது வாரியார் சுவாமிகளின் வாதம். அப்படியானால் முருகனை வழிபடும்போது என்ன பாடல்கள் பாடலாம் என்ற கேள்வி எழுகின்றது. அதற்கான அவரின் பதில், **திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அநுபூதி** என்பவை என்பதே!

பிரபல பாடகர்கள் அழகாகப் பாடியதால் கவசம் பிரபலமாகிவிட்டது. **நான் பாடிப் பயன் அடைந்தேன்; அதிலே என்ன பிழை? என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். சரி எது, பிழை எது என்று அறிஞர்களிடமிருந்து அறிந்ததைச் சொல்வதுடன் என் கடமை நிறைவாகிறது. முடிவு எடுப்பது வாசகர் கையில்.**

க ஜெகதீஸ்வரன்
ஆசிரியர்

# இந்த இதழில்


| | |
|---|---|
| கந்தசஷ்டி விரதம் | 03 |
| கந்தபுராணத்தின் தாற்பரியம் - கந்தபுராணச் சிந்தனைகள் | 05 |
| சனாதன தர்மம் | 07 |
| சோமநாதம் - பணயக் கட்டுரை | 09 |
| இன்பமே எந்நாளும் துன்பமில்லை | 13 |
| நாற்பது ஆண்டு நிறைவில் நாற்பது திருமணங்கள் | 16 |
| வித்துவான் வேந்தனார் | 17 |
| சைவசித்தாந்தம் விளக்கும் உண்மைகள் | 31 |
| ஆறுவது சினம் | 34 |
| Hinduism in search of answers | 35 |
| கண்ணனும் தாத்தாவும் | 42 |
| Thirukural Stories | 47 |


<u>**அட்டைப்படம்: திருமண மாப்பிள்ளைகள்; பெண்கள்**</u>

# கந்தசஷ்டி விரதம்

## திருமுருக கிருபானந்தவாரியார்

உலகத்திலே சிறந்த செல்வம் படைத்தவர் சிலரும், வறுமையாகிய தீயின்மேற் கிடந்து வாடுகின்றவர் பலருமாக இருககின்றனர். இதற்கு என்ன காரணம்?

இறைவனை நினைந்து நல்ல விரதங்களை நோற்றவர் சிலர்: விரதங்களை நோலாதவர் பலர். முற்பிறப்பில் நல்விரதமிருந்து இறைவனை வழிபட்டவர், இப்பிறப்பில் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு வாழ்வார்கள்; அல்லாதவர் நல்குரவில் ஆழ்ந்து அல்லற்படுவர். இதனைத் தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் தெரிவிக்கின்றார்.

**இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர்**

"இரை தேடுவதோடு இறையுந்தேடு" என்று பாம்பன் சுவாமிகள் கூறுவார். ஆகவே மனிதப் பிறப்பெடுத்த நாம் இப்பிறப்பை நமக்குத் தந்த தலைவனைக் குறித்து விரதங்கள் இருந்து வேண்டுதல் வேண்டும்.

எளிதிலே அருள்புரியும் மூர்த்தி கலியுகவரதராகிய கந்தக் கடவுள். தலையாய தேவாதி தேவர்க்கெல்லாம் தலையாய தனிப்பெருந் தலைவர். அவரைப்பற்றி "மாலயனுக்கு அரியான், மாதவரைப் பிரியான்" என்பர் அருணகிரிநாதர். முருகப்பெருமானை நினைந்து நல்விரதங்களை ஆற்றி வழிபாடு செய்தோர் எல்லா நலன்களையும் எளிதிற் பெறுவர்.

முருகவேளுடைய விரதங்களுட் தலையாய விரதம் கந்தசஷ்டி விரதமாகும். சிவபெருமானுடைய விரதங்கள் எட்டு. அவற்றுள் தலையாயது சோமவார விரதம். சிவனின் அஷ்ட விரதங்களுள் ஒன்று **தீபாவளி விரதம்**. இறைவன் ஜோதி வடிவானவன்.
"மறைய நின்றுளன் மாமணிச் **சோதி**யான்", "திருவையா றகலாத செம்பொற் **சோதி**", "ஆதியும் அந்தமு மில்லா அரும்பெருஞ் **சோதி**", "தீப மங்கள **சோதீ** நமோநம"
என்பனவாதி தமிழ் வேதவசனங்களால் அறிக. ஆகவே சிவபெருமானை உள்ளன்புடன் நினைத்து வரிசையாக விளக்குகளை வைத்து வழிபடுகின்ற விரதம் தீபாவளி.

**தீபம் - விளக்கு, ஆவளி - வரிசை.**

விளக்குக்களை வரிசையாக வைத்துச் சிவபெருமானைத் தீபாவளியன்று வழிபடவேண்டும். இந்த விரதத்தின் பெருமையையும், நோற்கும் முறையையும் உபதேச காண்டத்தில் நன்றாக உரைக்கப்பட்டிருக்கின்றது. இவ்விரதத்தை உமையம்மையார் நோற்றனர்.

**நரகாசுரனைக் கொன்ற காரணத்தால் கொண்டாடப்படுவது தீபாவளி என்பது பிழை. ஓர் அசுரனைக் கொன்றதற்காக ஒரு கொண்டாட்டம் இருக்க முடியாது. அப்படியானால், இரணியன், இராவணன், இடுன்பன், பகன், சலந்தரன், அந்தகன் முதலிய அரக்கர்களைக் கொன்றதற்கும் கொண்டாட்டம் இருக்கவேண்டும். ஆகவே நரகாசுரனை வதைத்ததற்கும் தீபாவளிக்கும் தொடர்பு இல்லையென உணர்க.**

தீபாவளி ஐப்பசித் திங்கள் தேய்பிறைச் சதுர்த்தசி திதியில் விரதமிருக்கவேண்டும். அன்று உபவாசமாக இருந்து சிவபெருமானை வழிபடவேண்டும். மறுநாள் அமாவாசையன்று பாராயணம் செய்யவேண்டும்.

அதற்கு மறுநாள் வளர்பிறை பிரதமையிலிருந்து கந்தசஷ்டி விரதம் தொடங்கவேண்டும்.

பிரதமையன்று அதிகாலை எழுந்து நதியாயின் நீரின் எதிர்முகமாக நின்றும், கிணறு குளங்களாயின் வடதிசை நோக்கி நின்றும் தண்ணீரில் அறுகோணம் வரைந்து அதில் சடாக்கர மந்திரத்தை எழுதி, இடையே பிரணவத்தை எழுதி, அத்தண்ணீரைச் சிவகங்கையாகப் பாவனை புரிந்து அதில் முழுகவேண்டும்.

பின்னர் கரையேறி, தோய்த்து உலர்ந்த தூய ஆடைகளை உடுத்து, அநுஷ்டானம் புரிந்து, முருகவேள் திருக்கோயிலுக்குச் சென்று மலரிட்டு விதிப்படி வலம் வந்து திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தரநுபூதி இவைகளை ஓதி உள்ளம் உருகி ஒருமையுடன் வழிபடவேண்டும்.

இவ்வாறு ஐந்து நாள்கள் நோற்றபின், ஆறாவது நாள் சஷ்டியன்று முன்கூறியபடி நீராடி சிறப்பாகச் செபதபங்களைச் செய்யவேண்டும். அதிகபாராயணம் செய்து சிந்தனை முழுவதும் செவ்வேள் திருவடிக்கே செலுத்தவேண்டும். அன்றிரவு ஆறுகாலங்களில் முருகன் திருவுருவத்துக்கு ஆயிரத்தெட்டு மந்திரங்களில் அருச்சனை புரியவேண்டும். உறங்காமல் உணர்வுடன் குழந்தை உள்ளத்துடன் துதித்து வடிவேலிறையை வழிபடவேண்டும். மறுநாள் சப்தமி திதியன்று நீராடி வழிபாடு முடித்தபின் ஆறு அடியார்க்கு அன்னம் வழங்கி உணவு கொள்ளவேண்டும். அன்று பகலில் உறங்கக் கூடாது.

ஆறு நாள்களிலும் பூரண உபவாசம் இருக்க முடியாதவர்கள் ஐந்து நாள்கள் பால் பழம் உண்டு சஷ்டியன்று முழு உபவாசமாக இருக்கவேண்டும். இதுவும் மாட்டாதவர்கள், ஐந்து நாள்கள் உச்சி வேளையில் இறைவனுக்கு நிவேதித்த உணவை உண்டு இரவு பட்டினியாக இருந்து, ஆறாவது நாள் மிகவும் அன்புடன் உபவாசமாக இருந்து வழிபடவேண்டும். ஐந்து நாள்களும் படுக்கையில் படுக்கக்கூடாது. தூய பட்டு விரித்து அதன்மீது படுத்து இதயத்தில் முருகனை நிறுத்தி அகக்கண்ணால் நோக்கித் தியானித்த வண்ணமாகவே உறங்கவேண்டும்.

இவ்வாறு சஷ்டி விரதம் இருந்தோர், மகப்பேறு முதலிய எல்லா நலன்களையும் எளிதில் பெறுவர். இவ்விரதத்தைப்பற்றிக் கந்த புராணத்தில் கூறுமாறுங் காண்க.

**வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டிய தனிவேற் செங்கை**
**அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாரும்**
**சொற்படு துலையின் திங்கள் சுக்கில பக்கந் தன்னில்**
**முற்பக லாதி யாக மூவிரு வைகல் நோற்றார்**

முருகவேள் முழுமுதற் கருணை முன்னிற்க.

**நன்றி: வாரியார் விரிவுரை விருந்து, வானதி பதிப்பகம்**

**மேலேயுள்ள கட்டுரையில், கந்தசஷ்டி விரதம் எப்படி அநுட்டிக்கவேண்டும் என்று வாரியார் சுவாமிகள் சொன்னதை அப்படியே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி அல்லது நீக்கி எழுத நமக்கு உரிமையில்லை. மேற்கு நாடுகளில், தற்காலத்தில், கட்டுரையிலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தையும் கடைப்பிடிப்பது கடினமாக இருக்கலாம். எனவே கட்டுரையைப் படிப்பவர்கள் தங்கள் தங்கள் வசதிக்கேற்பச் சில விடயங்களை எடுத்துக்கொள்ளவேண்டும். நோய்கள் உள்ளவர்களும் அந்த நோய்களுக்கு மருந்துகள் உண்பவர்களும் முழுமையாக உபவாசம் இருக்க இயலாது; இருக்கக்கூடாது.**

**- ஆசிரியர்**

# கந்தபுராணத்தின் தாற்பரியம்

## கந்தபுராணச் சிந்தனைகள்

**Dr. சிவலோகநாதன்**

மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றான திருவருட்பயனிலே ஆணவத்தைப்பற்றிச் சொல்ல வந்த உமாபதி சிவாசாரியார்:-

**"ஒருபொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்**
**இருபொருளும் காட்டாது இது"**

என்று சொல்கிறார். "இருள் தன்னுள் மூழ்கியிருக்கின்ற ஒரு பொருளையும் காட்டாவிட்டாலும் இருள் தன்னுடைய உருவத்தைக் காட்டும். அதனாலே இருளால் பீடிக்கப்பட்ட தன்மையை அறிய முடியும். ஆனால் ஆணவமோ தன்னுடைய உருவத்தையோ, அன்றிப் பீடிக்கப்பட்ட பொருளையோ காட்டாது. இதனால் ஆணவத்தினால் பீடிக்கப்பட்டிருப்பது தெரியாமல் பீடிக்கப்பட்டவர் அழிந்து போவார்" என்பது பொருள். உயர்நிலை அடைந்தவர்கள் இந்த ஆணவத்தினால் பீடிக்கப்பட்டு அழிந்து போவதை உலகிலே நெடுகிலும் காணக்கூடியதாய் இருக்கிறது. கீழ்நிலை, பணிவு, முயற்சி, உயர்வு, ஆணவம், பேரழிவு இதுவே நாம் காணும் தொடர் நிகழ்ச்சிகள்.

**"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லைச்**
**செய்நன்றி கொன்ற மகற்கு"**

என்றார் வள்ளுவப் பெருமான். பெரும்பாலும் ஆணவத்தின் வசப்பட்டவர்கள் நன்றி மறந்தே அழிவைத் தேடுகிறார்கள்.

மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்த அசுரர் குலத்திற்கும் பேரருள் புரிகிறார் சிவபெருமான். மிகுந்த பலத்தையும், அழியா யாக்கைளையும், ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கு மன்னாதி மன்னனாக இருக்கும் பாக்கியத்தையம் கொடுக்கிறார். தேவர்களை வென்று ஏவல் கொள்ளுமளவிற்கு வரத்தின் வலிமை இருந்தது. சாதாரணமாக அறிவுள்ளவர்கள் சிவனுக்கும் அவர் குடும்பத்தினருக்கம் பெரும் நன்றி கொண்டவர்களாக இருந்திருப்பார்கள். ஆனால் சூரன் அவ்வாறில்லை. தேவர்களைச் சிறையிலிருந்து விடும்படி கேட்டபடியால், குழந்தை என்றும் பாராமல் முருகப் பெருமானை அழிக்க நினைக்கிறான். இந்த நன்றி கொன்ற காரணத்தினால் சூரன் கிளையோடு மாண்டு போகிறான். "ஒரு நன்மையை உதவியவரின் மனம் வருந்துமாறு, ஒரு தீமையை எண்ணிச் செய்தால், கீழான அத்தீமை, செய்த அவரை, முன் செய்த நன்மையே கொன்றுவிடும். அதுவல்லது அவரைக் கொல்ல ஒரு எமனும் வேண்டுமோ.

**ஒன்றொரு பயன்றனை உதவி னோர்மனங்**
**கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்**
**புன்றொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே**
**கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ**

**இரணியன் யுத்தப் படலம் 10**

வழமையான கீழ்நிலை, பணிவு, முயற்சி, உயர்வு, ஆணவம், அழிவு, தொடர் நிகழ்ச்சி, இதைத்தான் கந்தபுராணம் சொல்கிறது. மொத்தத்தில் ஆறு காண்டங்களிலே 10345 பாடல்கள். இவற்றில் அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம் மூன்றும் சூரன் பிறப்பு, வளர்ச்சி, தவம், உயர்ச்சி, பதவி, கொடூரம்(ஆணவம்), அழிவு என்பனவற்றைச் சொல்வன. கிட்டத்தட்ட

6000 பாடல்களில் 60% பாடல்கள் சூரனைப் பற்றியவை. இதை ஏன் விரிவாகச் சொல்லப்பட்டது என்றால், அது எமக்காக; வாழ்க்கையிலே நாமும் சூரன் விட்ட பிழையை விடாமல் எமது வாழ்க்கையை நடத்திச் செல்வதற்காக. கந்தபுராணத்தின் தாற்பரியம் வழமையான தொடர் நிகழ்ச்சியான கீழ்நிலை, பணிவு, முயற்சி, உயர்வு, ஆணவம், அழிவு என்ற தொடருக்கு ஆட்படாமல் முருகனிடம் அன்பு வைத்து ஈடேறுதல் என்பதே. சூரனை ஆணவம் எவ்வாறு மாற்றியதெனப் பார்ப்போம். பெருவேள்வி செய்து வரம் பெற்ற பிறகு, சூரன், குபேரன், பிரம்மா, விஷ்ணு, அக்கினி என்று எல்லோரையும் யுத்தத்தில் வெல்கிறான். அசுர சேனைகள் எங்கும் திக்கு விசயம் செய்கின்றன. எல்லோரையும் வெற்றி கண்டவன் சிவனை மறக்கவில்லை. சிவபெருமான் வீற்றிருக்கும் கைலை மலையை அடைகிறான். கோயிலின் முன் வாயில் நின்ற அவனை நந்தி தேவர் சிவபெருமானின் கட்டளைப்படி உள்ளே செல்ல அனுமதிக்க, உள்ளே சென்று உமையோடு வீற்றிருந்த சிவபெருமானைப் பேரார்வத்தோடும் பக்தியோடும் வணங்கி நிற்கின்றான்.

**போந்தனன் அமலன் கோயிற் புறங்கடை வாயில் நின்றே**
**ஆய்ந்திடு நந்தி யெந்தை அருள்முறை உய்ப்பச் சென்று**
**காந்தளை யனைய செங்கைக் கவுரியோ டுறையும் முக்கண்**
**ஏந்தல்முன் அணுகி ஆர்வத் திறைஞ்சியே ஏத்தி நின்றான்.**

**-திக்குவிஜயப் படலம் 131**

இந்த நிகழ்ச்சி வரம் பெற்று உயர்ச்சி பெற்றவுடன் நடந்தது. பிறகு 108 யுகங்கள் அரசாட்சி நடைபெற்றபின் வீரவாகுதேவர் முருகப் பெருமானின் தூதுவராக வந்து "தேவர்களைச் சிறை விடும்படியும் அல்லது யுத்தத்திற்கு ஆயத்தம் செய்யும்படியும்" சொல்லிச் சென்றார். மந்திராலோசனை நடைபெறுகிறது. பலரும் யுத்தத்திற்கு செல்ல வேண்டும், தாம் சென்று யுத்தம் செய்து முருகப் பெருமானையும் சேனைகளையும் அழித்து வருவோம் எனச் சொல்கின்றனர். அந்த நிலையிலே சிங்கமுகாசுரன், சூரன் விட்ட பிழைகளையும், முருகப் பெருமானின் பக்கத்திலே உள்ள நியாயங்களையும் சொல்லித் தேவர்களைச் சிறையின் நீக்கிச் சமாதானம் செய்யும்படி கூறுகிறான். சூரன் மிகவும் கோபங்கொண்டு "தேவராக உள்ளவரின் சிறைக் காவலை விடேன். அவர்களே அல்லாது, அவர்களின் தலைவனான இந்திரனையும் தேடிக் கண்டுபிடித்துச் சிறையிலிடுவேன். ஏக நாயகனான சிவபெருமானே வந்து போரிட்டாலும் அவரோடும் எதிர்த்துப் போர் செய்வேன். ஆகையால் இத்தகைய சிறு சொற்களைச் சொல்லாமல் மறந்துவிடு" என்று சூரன் சொல்கிறான்.

மாக ராயனோர் காப்பினை விடுகிலன் மற்றைப்
பாக சாதனன் தன்னையும் அருஞ்சிறைப் படுப்பன்
ஏக நாயகன் எய்தினும் எதிர்த்துப்போர் புரிவன்
ஆகை யால்இனி இச்சிறு மொழிகளை அயர்த்தி

-சூரன் அமைச்சியற் படலம் 150

**இரண்டு சந்தர்ப்பங்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசமே ஆணவத்தின் பிடிப்பு. இதை அடக்கி வாழ்வதே கந்தபுராணம் காட்டும் சைவக் கலாசாரம். ஆணவத்தால் பீடிக்கப்பட்ட நாம் பல சந்தர்ப்பங்களில் சூரன் விட்ட பிழைகளை விடக் கூடும். அவற்றை இலகுவில் புரிந்து அப் பிழைகளை விடாது தவிர்த்து, வாழ்வில் ஈடேறவேண்டும் என்பதே கந்தபுராணத்தின் தாற்பரியம் ஆகும்**

# சனாதன தர்மம்

## இலண்டன் அம்பி

**"எண்ணிய நிறைதல் வேண்டும் - நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும் ..."** (பாரதியார்)

சைவம் எனும் வாழ்க்கை நெறி எவ்வாறு ஆரம்பித்தது - அதன் பல்வகைப்பட்ட கருத்துரை களை எங்ஙனம் இலகுவாக அறியலாம் என்ற கேள்வியால் எழுந்ததே இந்தக் கட்டுரை. இது பலருக்கும் உதவும் என்பது நம்பிக்கை.

அறிந்த சில தகவல்களை - பல்வேறு ஆதாரங்களுடன் பெற்று - இலகுவிற் புரியும்வண்ணம் எழுதி அளிக்க இறை பக்தியுடன் இயன்றவரை முயல்கிறேன். இந்தக் கருத்துக்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டனவேயன்றி எனது சொந்தக் கருத்துக்கள் அல்ல.

காலத்தைக் கடந்து (சரித்திர காலத்துக்கு முன்னரே) அறியப்பட்ட விடயங்களைத் தொகுத்து உருவானதே சனாதன தர்மம். சனாதனம் என்பதன் பொருள் தொன்மையானது - சரித்திர காலத்துக்கு அப்பாற்பட்டது என்பது. தர்மம் எனும் சொல் உருவான விதம்: தர் என்பது ஆதரவு - பிரபஞ்சத்தைத் தாங்கும் ஆதாரம் எனலாம். ஆதாரம் என்று இங்கு குறிப்பிடுவது இறைவனையே குறிக்கும். இறைவனை அறிதல் ஓர் அநுபவமே. ஆன்மாவானது இறைநிலையை - அதாவது தனது தோற்றத்தை - அநுபவித்தலை நோக்கிச் செல்லும் வழி ஆன்மிகம் எனலாம். தர்மம் என்பதற்கு நற்செயல், உண்மை, நியாயமானது என்பனபோன்ற பற்பல பொருள்கள் உள்ளன.

வேதங்கள் எனப்படும் தொகுப்பு பல்வேறு ஞானிகளால் பல்வேறு சமயங்களில் அறியப்பெற்று வாய்மொழி மூலம் தொடர்ந்து பெறப்பட்ட பெருஞ்சொத்து. இவ்வாறு அறிந்தோரே ரிஷி (ஞானி)கள். ரிஷி என்றாலே (தாம் கேட்ட) ஒலிகளை எழுத்துவடிவில் வழங்கியோர்; நாம் ஊனக் கண்ணால் பார்க்க முடியாதனவற்றை ஞானக்கண்ணால் அறிந்து எமக்கு அறியத் தகுந்தவாறு வழங்கியோர். வானொலியில் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியைக் கேட்கவேண்டுமாயின் அதற்கான அலை வரிசையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமல்லவா? அதை ஒருமுகப்படுத்தல் எனலாம்.

இவ்வாறு தாமகவே பயிற்சியால் பெற்ற அநுபவம் மூலம் ஞானியர் (ரிஷிகள்) பிரபஞ்சத்தில் பெறப்பெற்ற இறை ஒலிகளை ஒருங்கிணைத்து வழங்கியவைகளே வேதங்களாகும். வேதங்களே சனாதன தர்மத்தின் அத்திவாரம். இவற்றை யார், எப்போது வழங்கினார் என்பதை அறியோம். பிரபஞ்சத்திலிருந்து இது பெறப்பட்டது என்பதனால் இது இறைவனின் படைப்பு.

எப்படி ரிஷிகள் இவற்றைப் பெற்றார்கள்? இதோ, இவ்வாறு இருக்கலாம்: சொல், செயல், சிந்தனை மூன்றிலும் தூய்மை இருத்தல் அவசியம். மேலும் நேரம், காலம், சூழ்நிலை ஆதியன இவற்றோடு இணைந்திட்டிருத்தல் அவசியம். அந்நிலையில் ஞானக்கண் செயற்பட வாய்ப்புண்டு.

எனவேதான், சனாதன தர்மம் இறைவனால் வழங்கப்பட்ட, விஞ்ஞானபூர்வமான, வாழ்க்கை நெறியாகும். இதற்கு ஆரம்பமும் முடிவும் கிடையாது. எதுவகையான சரித்திர காலத்தையும் கடந்தது. புவியீர்ப்பு ஒரு மனிதராற் கண்டுபிடிக்கப்பட்டது எனினும் அது முன்னரே இருந்தது என்பதே உண்மை. எப்போதும் இருக்கும் என்பதும் உண்மை. அவ்வாறே சனாதன தர்மமும். உருவானதை

அறிய, இதை எவர் ஒரு நபரும் ஆக்கியவர் அல்லர். ஒரு சமூக பண்பாட்டு நெறியாகவே சனாதன தர்மம் உருப்பெற்றதெனலாம்.

சனாதன தர்மத்தை நெறிப்படுத்த அல்லது கட்டுப்படுத்தவென ஒரு மைய அமைப்பும் இருந்ததில்லை. இந்நெறியானது பல்வேறு வகையில் பரவலான நம்பிக்கைகள், சடங்குகள், சமயநூல்கள் என்பவற்றை உள்வாங்கி உருவானதே. அவ்வாறு பெறப்பட்ட வாழ்வுநெறி அளிக்கும் முக்கியமானதெனத் தோன்றும் சில அடிப்படைகளைச் சற்றே கவனிப்போம்.

வேதம் என்ற சொல் "வித்" என்ற வடமொழிச் சொல்லை வேராகக் கொண்டது. "வித்" என்றால் வடமொழியில் அறிதல் என்று பொருளாகும். எனவே, வேதம் என்பதற்கு "உயர்வான அறிவு" என்று பொருள். வேதங்கள் என்பவை பொதுவாக இன்று இந்துசமயம் என்று அறியப்படும் சமயத்திலுள்ள அடிப்ப டையான நூல்களில் சிலவாகும். கிறிஸ்துவுக்கு முன்னர், பல்லாயிரக்கணக்கான (குறைந்தது ஐயாயிரம்) வருடங்களுக்கு முன்னரும் இந்துக்களின் வேதங்கள் இன்றிருப்பது போலவே இருந்தன என்று பண்டித பாலகங்காதர திலகர் நிரூபித்துள்ளதாகச் சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளார். வேதங்கள் நான்கு வகையாய் இருப்பினும் ரிக், யஜுர், சாமவேதம் ஆகியவைதான் அடிப்ப டையில் வேதங்களாகக் கருதப்பட்டன. அதர்வண வேதத்தைத் தீமையென்று சிலர் கருதினர். பிற்காலத்திலேதான் அது நான்காவது வேதமாகச் சேர்க்கப்பட்டது. இவை தமிழில் நான்மறை என்று கூறப்படுகின்றது. வேதங்கள் நான்கு என வகுத்தவர் வியாச முனிவர். வேதங்களை "சுருதி", "மறை" எனவும் கூறுவர்.

ஆகமங்கள் என்பவை சைவம், வைணவம், சாக்தம் ஆகியவற்றின் கோட்பாடு, கோயிலமைப்பு, கோயில் வழிபாடு, மந்திர மொழிகள் அடங்கிய நூல்வகையாகும். இவை சமசுக்கிருதத்திலேயே எழுதப்பட்டுள்ளன. இவை வேதங்களை அடிப்படையாகக் கொள்ளாதவை. எனினும் இவை வேதங்களுக்கு மாறானவையும் அல்ல. ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு வகையான வழிபாட்டு முறைகள் பற்றிக் கூறுகின்றன.

உபநிடதங்கள் பண்டைய தத்துவ இலக்கியமாகும். இந்து சமயத்தினரின் ஆதார நூல்களின்கீழ் இவை வகைப்படுத்தப் படுகின்றன. வேதங்களில் இவை இறுதியாக வந்தவை ஆகும். எனவே இவை வேதாந்தம் எனவும் கூறப்படுகின்றன.

இவ் வாழ்வு நெறிகள் (வேதங்கள், உபநிடதங்கள்) ஆதியனவற்றின் மூலம், பிரம்மசூத்திரம் எனும் நூற் சுருக்கத்தால் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

## படித்ததில் பிடித்தது

**இந்துக்களிலே எல்லோருமே கைகளில் ஆயுதங்கள் ஏந்துவதில்லை. ஆனால் இந்துமதக் கடவுள்களின் கைகளில் ஆயுதங்கள் இருக்கும். மற்ற மத கடவுள்களின் கைகளில் ஆயுதங்கள் எதுவும் இருக்கமாட்டா. ஆனால் ஆயுதத்தை மற்ற மதத்தினர் கையில் வைத்துள்ளார்கள்.**

**மனிதர்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று இந்துக்கள் நினைப்பதாலேயே இந்துமதக் கடவுள்களின் கைகளில் ஆயுதம் இருக்கிறது. கடவுளை நாம்தான் காப்பாற்றவேண்டும் என்று நினைப்பதாலேயே மற்ற மதத்தவர் கையில் ஆயுதங்கள் உள்ளன.**

**கவிஞர் கண்ணதாசன்**

# சோமநாதம்

## ஜோதிர்லிங்க பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr கதிர்காமநாதன்



சந்திரனைத் தினமும் பார்க்க இயலுமா? இயலாது. முழுமையான சந்திரனை மாதத்தில் ஒரு முறைதான் பார்க்க இயலும். சந்திரனுக்குச் சோமன் என்றும் ஒரு பெயருண்டு. சந்திரன் வழிபட்டதால் அந்தத் தலத்துக்குச் சோமநாதம் என்று பெயர் வந்தது.

சோதிடத்திலும் சந்திரனுக்கு முதலிடம் உண்டு. சந்திரலக்கினம் என்று சொல்வதுண்டு. வாழ்வில் தாய்க்கு முதலிடம் என்பதுபோல.

பன்னிரண்டு ஜோதி இலிங்கங்களில் முதலிடம் சோமநாதத்துக்கே! மேலும் சோமநாதம் பஞ்சநாதத் தலங்களுள் ஒன்றாகும். ஏனையவை, இராமநாதம், வயித்தியநாதம், விஸ்வநாதம், ஜகந்நாதம் ஆகும். முந்தைய கலசம் இதழ்களில் ஜகந்நாதம் தவிர, மற்றைய மூன்று தலங்கள் பற்றிய கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன.

**சோமநாதம் - இறைவர் சோமநாதர் இறைவி பார்வதி**

சோமநாதம் குஜராத் மாநிலத்தில் பிரபாச பட்டணத்தில் தென்மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளது.

இத்தலத்தின் வேறு பெயர்கள்: பிரபாசப்பட்டணம், வைஸ்வபுரம் என்பன. சந்திரன் தான் இழந்த ஒளியை மீண்டும் பெற்றதால் பிரபாசப்பட்டணம் என்ற பெயர் வந்தது.

சிறப்புக்கள்: சிந்துநதிப் பிரதேசமான ஹரப்பா, மொகஞ்சதாரோ, சோமநாதம் ஆகிய இடங்களில் மிக நாகரிகமான மக்கள் வாழ்ந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. இது ஆரியர் வருமுன் இருந்த நிலை. அம்மக்கள் சூரியனை வழிபட்டதற்குச் சான்றாக தற்போதும் சூரியக் கோயில்கள் இருக்கின்றன.

சோமநாதர் ஆலயத்தில் விலையுயர்ந்த கற்களாலும் தங்கம் வெள்ளி போன்றவை களாலும் அமைக்கப்பட்ட சுவர்களும் தங்கத் திருவுருவங்களும் இருந்தன. மணியடிக்கும் சங்கிலிகூட தங்கத்தால் அமைக்கப்பட்டிருந்தது. செல்வச் செழிப்போடு இருந்ததால் கஜினி என்னும் இடத்திலிருந்து அரசன் கஜினி முகம்மது என்பவன் பதினேழுமுறை படையெடுத்து இக் கோயிலைச் சூறையாடி னான். இதைவிட இத்தலம் ஏழுமுறை இடித்து நிர்மூலமாக்கப்பட்டது.

இந்திய சுதந்திரத்தின் பின் 1951ஆம் ஆண்டு வைகாசி மாதம் பதினொராம் திகதி முதற் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்களால் இலிங்க பிரதிஷ்டை செய்யப்பட்டு, பதினொரு ஆண்டுகளின் பின்னர் 1962இல் திருப்பணி நிறைவுற்றது. அவர் தன் உரையில் நிர்மாணிப்பு கட்டாயமாக நிர்மூலத்திலும் அழிவிலும்பார்க்க பிரகாசிக்கும் என்று கூறினார். குடியரசுத் தலைவரின் வாக்குப் பொய்க்கவில்லை. 1.1.1995 முதல் பொதுமக்களின் வழிபாட்டுக்கு திறந்து

வைக்கப்பட்டது. 27.10.2015இல் கடைசியாக கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.

**பிரயாணம்:** நாங்கள் போர்பந்தரிலிருந்து (காந்தி பிறந்த இடம்) காலை 8 மணிக்கு காரில் சென்றோம். காரின் சக்கரத்துக்குக் காற்றுப்போய்விட்டது. சக்கரம் மாற்றும்வரை வண்டியைவிட்டு இறங்கிச் சுற்றாடலைப் பார்த்தேன். பசுமையான வேலிகள். அதில் செவ்வரத்தம் பூக்கள். பார்த்தவுடன் நமது ஊர் வாசனையடித்தது. செழிப்பான தென்னை மரங்கள், பெரிய வளைந்த கொம்புகளுடன் கொழுத்த மாடுகள். யாவும் ஒரு பூரணமான நிறைவைக் கொடுத்தது. இவற்றைவிட நமது ஒற்றை மாட்டு வண்டிபோல் ஒரு ஓட்டகம் சார தியோடு வண்டியை இழுத்துச் சென்றது. முதற்தட வையாக இதைப் பார்த்தோம்.



போர்பந்தர் மக்கள் அநேகமாக வசத-யில்லா தோர். ஆனால் மனித நேயத்துக்குக் குறைவில்லை. மோட்டார் சயிக்கிளிற் செல்பவரிடம் புகைரத நியைம் எங்கே இருக்கிறது என்று கேட்டேன். அவர் தனது வண்டியிலேயே என்னை ஏற்றிச்சென்று அங்கு இறக்கிவிட்டார். பதினொரு மணிபோல் சோமநாதத்தை அடைந்தோம். காரிலிருந்து இறங்கியவுடன் ஒரு ஓட்டோ காரர் ஓடோடிவந்து திரிவேணி சங்கமத்துக்கு அழைத்துச் செல்வேன், 501 ரூபா கொடுங்கள் என நச்சரித்தான். இந்த இடத்துக்குக் காரில் செல்ல இயலாது. அதனால் முதலில் இங்கு சென்றோம்.

திரிவேணி சங்கமம் சரஸ்வதி நதி, கபில நதி, இரண்யாநதி ஆகிய மூன்று நதிகள் ஒன்று சேருகின்றன. இவை மூன்றும் பிறப்பு, வாழ்க்கை, இறப்பு என்பவற்றைக் குறிக்கின்றன. மூன்றும் சேர்ந்து அரேபியக் கடலில் விழுகின்றன. திரிவேணி சங்கமம் புண்ணிய தீர்த்தமாகக் கருதப்படுகிறது. இதில் நீராடினால் சகல பாவங்களும் தீரும். பிதிர் களின் சிராத்தம் செய்வதற்கும் இச் சங்கமத்துக்கு மக்கள் செல்கின்றனர். புராண காலத்திலிருந்தே இதன் புகழ் ஓங்கியுள்ளது. இராமாயணம், மகாபாரதத்தில் இச்சங்கமத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இச்சங்கமத்தை அடையப் படிகள் உள்ளன. நாங்கள் சென்று நீராடாமல் தலையில்மட்டும் நீரைத் தெளித்தோம். சமீபத்திலிருந்த திரி வேணிமாதா கோயிலுக்குச் சென்று வழிபட்டோம். திரிவேணி சங்கமத்துக்குத்தான் மக்கள் முதலிலே சென்று நீராடுவர். பின்னர் தீபமேற்றி ஆரத்தி செய்து பத்திப் பாடல்கள் பாடி வழிபடுவர். இதன் பின்னர்தான் சோம நாதரிடம் செல்வர்.

கிருஷ்ணபகவான் இங்கு வந்ததாக வரலாறு கூறுகின்றது. மிகப் பெருமை வாய்ந்த அழகிய ரம்மியமான சூழ்நிலைகளை கொண்ட இவ்விடத்துக்கு தகுந்த புகழ் இல்லை.

**கிருஷ்ணர் கோயில்:** மதுராவில் பிறந்து பிருந்தாவனத்தில் வளர்ந்து துவாரகாவில் அரசாண்ட கிருஷ்ணபரமாத்மா ஹிரண்யா நதிக்கரையில் உடலை நீத்தார். யோக நித்தி ரையில் ஆழ்ந்திருக்கும்போது அவரின் காற்பெருவிரலைக் கிளியென்று எண்ணி வேடன் அம்பெய்தான். அதனால் அவர் இறந்தார். இவ்விடத்தில் கிருஷ்ணர் கோயில் உள்ளது. தரிசித்தோம். அருகில் அவரது பாதம் கண்டோம். வணங்கினோம்.

**பரசுராமர் கோயில்:** விஷ்ணுவின் ஆறாவது அவதாரம் பரசுராமர். திரிவேணி சங்கமத்துக்கு அருகில் இக்கோயில் உள்ளது. சபா மண்டபம், நிருத்த மண்டபம், கர்ப்பக்கிருகம் கொண்டது

இக்கோயில். இங்கு பிள்ளையார், அநுமன் கோயில்களும் இருக்கின்றன. இவற்றைவிடத் தாயார் ரேணுகா தேவிக்கும் கோயில் உண்டு. இங்குள்ள சந்திரன், சூரியன், பிள்ளையார் கோயில்கள் இடிந்த நிலையில் உள்ளன. திரிவேணி சங்கமம், ஆறுகள், கடற்கரை யாவும் கண்ணுக்கு விருந்தும் உள்ளத்துக்கு உவகையும் கொடுக்கின்றன. இவை எல்லாவற்றையும் பார்த்து, தரிசித்துத் திரும்பி வரும்போது மதியமாகிவிட்டது.

**சோமநாதர் கோயில்:** இக் கோயிலின் வரலாறு சுவாரசியமானது. தக்கன் என்னும் அரசனுக்கு இருபத்தேழு பெண்பிள்ளைகள். சுந்தரவடிவான சந்திரனே மகள்மாருக்குத் தகுந்த கணவ னெனத் தக்கன் முடிவுசெய்து அவர்களைச் சந்திரனுக்கு மணமுடித்தான். சந்திரனோ அந்த இருபத்தேழு நங்கையருள் மிக அழகான ரோகிணி என்பவளில் அதிக விருப்பும் பிரேமையும் கொண்டிருந்தான். அவளுடன் நெருங்கியிருந்ததால் மற்றவர்கள் தாங்கள் ஒதுக்கப்பட்டதாக உணர்ந்தார்கள். தங்கள் தந்தையாரிடம் சென்று இதுபற்றி முறை யிட்டனர். தக்கன் சந்திரனை அழைத்துப் பல புத்திமதி கூறியும் சந்திரன் செவி சாய்க்கவில்லை. அதனால் சீற்றமடைந்த தக்கன் சந்திரனை தேய்ந்துபோகச் சபித்தான். இச் சாபத்தால் சந்திரனின் சுந்தரரூபம் மறைய ஆரம்பித்தது. உலகம் உய்யக் காரணமாக இருக்கும் அமிர்தம் சுரக்கும் சக்தியையும் சந்திரன் இழந்தான். சந்திரனின் பதினாறு கலைகளும் தினம் ஒன்றாகப் பதினைந்து நாள்களில் மறைந்துவிட்டன. உலகின் உயிர்கள் வாடியதால் தேவர்களுக்குக் கிடைக்கின்ற அவிர்ப்பாகமம் கிடையாது போய்விட்டடது. தேவர்கள் பிரமனிடம் சென்று முறையிட்டனர். பிரமன் சந்திரனை பிரகாசப் பட்டணம் சென்று சிவனைநோக்கிக் கடுந்தவம் செய்யும்படி ஆலோசனை வழங்கினார்.

சந்திரனின் கடுந்தவத்துக்கு இரங்கிய சிவன், சந்திரன்முன் தோன்றி, "என்ன வரம் வேண்டும்? கேள்" என்றார். "சாபவிமோசனம் அடை யவேண்டும்" எனக்கோரினான் சந்திரன். அரசனாகிய தக்கனின் சாபத்தை முழுமையாக மாற்ற முடியாததால் கிருஷ்ணபட்சத்தில் மாத்திரம் கலைகளை இழக்குமாறும், சுக்கில பட்சத்தில் கலைகள் மீண்டும் பெற்று ஒளி பெருகி, பவுர்ணமியன்று பூரணமாக உலகெங்கும் வியாபித்து இருக்குமாறும் வரங்கொடுத்தார். சந்திரனிடம் மீண்டும் அமிர்தம் சுரக்கும் சக்தியை அளித்து, பிறைச் சந்திரனாக தன் சடாமுடியிலே சூடிக்கொண்டார்.

சிவபெருமான் முட்டைவடிவில் ஒரு ஜோதிலிங்கத்தைக் கொடுத்து விடைபெற்றார். சந்திரன் அதை பிரதிட்டை செய்து, பின்னர் பெரிதான ஒரு லிங்கத்தையும் பிரதிட்டை செய்து வழிபட்டான். அந்த லிங்கமே சோமநாத ஜோதிலிங்கம் ஆகும். இடம் சோமநாதபுரம். இன்றும் சோமநாதபுரக் கடற்கரையில் சந்திரனின் ஒளி பிரகாசமாக ஒளிருமென கூறுகின்றனர்.

**சோமநாதம்:** சந்திரனின் அழகுபோல் இக்கோயிலும் மங்களகரமான நிறத்தில், பெரிய அளவில் பிரகாசிக்கிறது. கோயிலின் முன்னே சர்தார் வல்லபாய் பட்டேலின் ஆளுயர சிலை இருக்கிறது. இவர்தான் பல முறை இடிபட்ட இக்கோயிலைக் கட்ட காரணமாக இருந்தவர்.


சாளுக்கியர் கட்டடக்கலை வடிவத்தில் அமைக்கப்பெற்ற இக்கோயில் பல கோபுரங்களைக் கொண்டு பிரமிக்கும் வகையில் அழகாகப் பரந்து பிரமாண்டமாக காட்சியளிக்கிறது. நடுவிலுள்ள கோபுரம் பெரிய கலசமும் சூலாயுதமும் காவி நிறக் கொடியும் கொண்டுள்ளது. விமானம் பதினைந்து மீற்றர் உயரமும் அதனுள் 8.2மீற்றர் கொடிமரமும் இருக்கிறது. கர்ப்பக்கிருகம், சபாமண்டபம், நிருத்த மண்டபம் உள்ளன. இக்கோயிலுக்கும் தென்துருவத்துக்கும் இடையில் ஒரு நிலப்பரப்பும் இல்லை. இதை அங்குள்ள கல்வெட்டிற் காணலாம்.

நாங்கள் சென்ற சமயம் மதிய பூசை ஆரம்பித்தது. தரையெல்லாம் சலவைக்கல். மூன்றடி உயரமுள்ள பெரிய சிவலிங்கம். பூசகர் மஞ்சள் உடை, சட்டையும் அணிந்திருந்தார்.

பூசையை யாவரும் பார்க்கும் வண்ணம் ஒதுங்கிநின்று பூசை செய்தார். ஆசைதீரப் பார்த்தோம். ஆரத்தியோடு அருச்சனை பூரணமாகியது.

சோமநாதம் பத்தர்களால் தரிசிக்கப்படும் முதன்மையான இடமாகும். இங்கு கிருஷ்ணர் இருந்ததாலும், திரிவேணி சங்கமம் இருப்பதாலும், பலராமர் பாம்பாக மாறிப் புற்றினுள் மறைந்த இடம் என்பதாலும், அருச்சுனன் சுபத்திரையை இங்கு மணந்ததாலும், இராமயணம், மகாபாரதம் சம்பந்தப்பட்டதாலும் புகழ்பெற்றது. இதைவிட காந்தி பிறப்பிடமாகிய போர்பந்தர் சமீபத்தில் இருப்பதும், முத்தித் தலமாகிய துவாரகாவும் அருகில் அமைந்ததிருப்பதும் ஒரு காரணமாகும்.

சோமநாதரை வழிபட்டால் காசநோய், தொழுநோயிலிருந்து சுகம்பெறலாம், சாபங்கள், பாவங்கள் தீருமெனக்கூறுவர்.




இக்கோயிலைச் சுலபமாகச் சென்று தரிசிக்கலாம். முதலில் குஜராத்தின் அலகா பாத்தை அடைந்து பேருந்துமூலம் செல்லலாம். புகையிரத மார்க்கமாகச் செல்வதானால், முதலில் வெராவல் நிலையத்தை அடையவேண்டும். இங்கிருந்து 6கிமீ தூரத்தில் கோயில் உள்ளது.

**யாத்திரைக்கு ஏற்றகாலம்:**
வைகாசி, ஆனி, ஆடி, புரட்டாதி மாதங்கள். வருடம் முழுவதும் செல்லாம். கோடையிற் குளிர்ச்சியாக இருக்கும் தினசரி பூசைகள் உண்டு.

**சந்திரன்:** சோதிடத்தில் சந்திரனை தாய்க்கிரகமாகவும், சூரியனைத் தகப்பன் கிரகமாகவும் கொள்வர். சந்திரனைக்கொண்டு சந்திரமாதங்களும், சூரியனைக்கொண்டு சூரிய மாதங்களும் உள்ளன.

சோதிடத்தில் சந்திரன் இருக்குமிடம் சந்திரலக்கினம். சூரியனுக்கு அப்படி ஒன்றும் இல்லை. சந்திர லக்கினமும் சாதகரின் லக்கினமும் ஒன்றுசேர்ந்தால் யோகமாகும். கர்க்கடகராசிக்கு அதிபதி சந்திரன். சந்திரன் எமது ஆழந்த அபிலாசைகளுக்கும் , சிறு பழக்கங்களுக்கும் எமது உள்மனநிலைக்கும் உரியவர். பூரண சந்திரநாளில் கடல் அலைகள் மோதுவதும் கவிஞர் பாடுவதும், கலைஞர் ஆடுவதும், எழுதுவதும், மனநிலை ஏறுவதும் நாம் காணும் அநுபவம்.

“பூரணசந்திரன் போல் அவள் முகமே” என்று பெண்களை வர்ணிப்பதற்கும் பயன்படுத்துவது சந்திரனையே.

“The sun acts the moon reacts” என சந்திரனை இப்படிக்கூறுவர். ஒருவருக்கு விஷயம் ஒன்று விளக்கிச் சொல்லமுடியாமல் தத்தளிக்கும்போது சந்திரன் கூறவைக்கும். ஆனால் சூரியனால் அப்படிச் சொல்ல முடியாது.

எண்பது வயதென்றால் 1000 பிறைகண்டவர் என்றழைக்கும் வழக்கம் உண்டு.

“திங்கள் ஆயிரந் தொழுதான் பேரால் விட்ட
பங்கு அடைபடாமை கண்டனர்”

**- பிட்டுக்கு மண்சுமந்தமை - திருவிளையாடல்**

# இன்பமே எந்நாளும் துன்பமில்லை

## -திருமதி சுகந்தி இந்துசேகரன்

சிவம் எனும் செம்பொருளை வழிபடுபவர்கள் சைவசமயத்தவர்கள். இவர்களின் நெறி சைவ நெறியாகும். சைவநெறி என்பது சிவத்தைச் சார்ந்து வாழ்தல் என்று பொருள்படும். அதாவது சிவம்குறித்து நிற்கும் தன்மைகள், அதன் குணாதிசயங்கள், விழுமியங்கள் என்பவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து செம்மையாக வாழ்தலாகும். அதுவே அன்பு நெறியாகும். பிறவிகளிலேயே உயர்வானது மானுடப்பிறவியாகும். இறைவன் தன்னை உணர்விப்பதற்காகவே இப்பிறவியை நமக்கு அளித்துள்ளான். தேவர்கள்கூடக் காணமுடியாத இறைவனை மனிதப் பிறவியில் மட்டுமே காணமுடியம்.

சிவத்துக்கும் அன்புக்கும் இடையிலுள்ள தொடர்பு அத்துவிதத் தொடர்பாகும். இதனையே **"அன்பே சிவம்"** என்னும் உறுதியான வரைவிலக்கணம் தந்து சைவத்துக்குச் சரியான இலக்கணம் கண்டுள்ளார் திருமூலர். இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று வகையான திருமேனிகளைக் கொண்டுள்ளான் எனச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. எனவே கடவுளுக்கு வடிவம் உள்ளது என்பது தெளிவாகின்றது. ஆனால், அதைப் புறக்கண்ணால் காண்பது அரிது. வாலறிவு என்று சொல்லப்படுகின்ற தூய அறிவினால் மட்டுமே காணத்தக்கது. இதனையே திருவள்ளுவர் **"மெய்ப்பொருள் காண்பது அறிவு"** என்று குறிப்பிடுகின்றார்.

மெய்ப் பொருள் என்பது உண்மைப் பொருள். அது ஒன்றுதான். அதுவே சிவம். ஞானிகள் அதனைத் தம் உணர்விலும், உறவிலும் கண்டார்கள். இதனை ஞானிகள் பல பெயரால் அழைக்கின்றனர். சிவம் எனும் கடவுளின் வடிவம் ஒன்றின் பெயர் அன்பு; மற்றொரு வடிவம் நீதி. நீதி வழுவா நெறிமுறையில் வாழ்பவர்கள் சைவர்கள். **"நீதி வழுவா நெறிமுறையில் இட்டார் பெரியோர்"** என்பது ஔவையார் வாக்கு. சைவசமயத்தவர்களுக்கு நிதியைவிட நீதியே பெரிது. சைவத்தை உணர்ந்தவர்கள் ஒருபோதும் நீதியைக் குறுக்கி நிதி சேர்க்க மாட்டார்கள்.

இறையன்பு, ஜீவகாருண்யம், ஒழுக்கம் நிறைந்த அறவாழ்வு எனும் இம்மூன்றும் நிறைந்து விளங்குவது நீதி. ஆதலால், மேன்மைகொள் சைவ நீதி ஆகச் சிறப்படைகிறது. சைவ சமயம் ஒரு வாழ்க்கை நெறியாகும். அதற்கு அடிப்படையானவை நீதி, ஒழுக்கம், பண்பு, கல்வி இறை வழிபாடு என்பவையாகும்.

இதனைத் தம் உணர்வால் கண்ட அப்பர் சுவாமிகள் பின்வரும் பாடல் மூலம் குறிப்பிடுகின்றார்.

**நீதியால் வாழ மாட்டேன்**
**நித்தலும் தூயேனல்லேன்**
**ஓதியும் உணரமாட்டேன்**
**உன்னையுள் வைக்க மாட்டேன்**
**சோதியே சுடரே உன்தன்**
**தூமலர்ப் பாதம் காண்பான்**
**ஆதியே அலந்து போனேன்**
**அதிகை வீரட்டனீரே**

**தி 4, பதி 26, பா 3**

இவற்றிலிருந்து நீதி கடவுளின் வடிவமென்பது தெளிவாகின்றது.

நமது மனம் விரும்பிய ஒன்றை நாம் அடையும்போது, இன்பமடைகின்றோம். அதேபோல நாம் விரும்பாத ஒன்று கிடைக்காவிட்டாலும் நாம் இன்புறுகின்றோம். இவையன்றி நாம் விரும்பிய ஒன்று கிடைக்காவிட்டாலும், விரும்பாதவை எம்மை வந்து சேர்ந்தாலும் துன்பம் உண்டாகிறது. இவ்வாறகத் துன்பம் ஏற்படும்பொழுது துக்கம் உண்டாகிறது. ஏதாவது இடர் வரும்பொழுது அச்சம் உண்டாகிறது.

எமது சைவசமய வாழ்க்கையில் துன்பம், துக்கம், கோபம், அச்சம் என்பவற்றிற்கு இடமேயில்லை. கறுப்புக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதைப் பார்த்தாலும் அது இருட்டாகத் தோன்றும். அது போலவே, சைவ சமயத்தின்படி நாம் ஆணவம் என்னும் நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறோம். இதனால் நாம் விரும்பியவை கிடைக்காவிட்டால் எல்லாம் கசப்பாகவே தோன்றும். இந்நோயைத் தீர்க்கும் வைத்தியர் எல்லாவற்றுக்கும் மேலான இறைவன். ஆதலால், அவருக்கு வைத்தியநாதன் என்று பெயர். நோயாளி தனக்கு ஆகாத உணவுகளை விரும்புவதுண்டு. ஆயினும் வைத்தியன் அதைக் கொடுக்கமாட்டான். அதுபோல, நமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதலுண்டு. ஆனால் வைத்தியநாதனாகிய கடவுள் அவற்றை நமக்கு அருளமாட்டார். ஆதலால், நாம் விரும்புவது நமக்குக் கிடைக்காவிடின் அது நமக்கு ஆகாதென்று உணர்ந்து அது கிடைக்காமற் போனதையிட்டுச் சந்தோஷப்பட வேண்டும். நோயாளி விரும்பாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கிறான். உதாரணத்துக்கு, பெரிய கொப்புளத்தைக் கத்தியால் கீறி வேதனையை ஆக்குகின்றான். அதுபோல சிவ பெருமானாகிய வைத்தியநாதர் நாம் விரும்பமாட்டாதவற்றை நமக்கு அளித்தாலும், கொடிய நோய்களை ஆக்குதலும் நமது ஆணவமாகிய நோயை நீக்கி நம்மை இன்பமாக வாழவைப்பதற்காகவே. ஆதலால், நம் முயற்சிகளைக் கடந்து, நாம் வெறுப்பவைகள் நம்மை வந்து அடைந்தாலும், நாம் பல துன்பங்களை அநுபவித்தாலும், அவை நமது நன்மைக்காவே கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து இன்புறுவதே சிறந்தது.

கொடிய நோயினால் பீடிக்கப்படுவதும், குழந்தை இறந்து போவதும் நன்மையானவைகளே என எடுத்துக் கொள்ள வேண்டும். அவை எமக்கு எப்படி நன்மையாகும் என்பதை நாம் அறிய வேண்டியதில்லை. இதனை இறைவனின் ஒரு மந்திரமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். ஏன்? எதற்கு? என்று வினவாமல் பின்பற்றுவது மந்திரம் எனப்படும். இதனையே **"தந்தைசொல் மிக்க மந்திரமில்லை"** என்று ஔவை கூறியுள்ளார்.

கடவுள், ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு வேத ஆகமங்களை அருளினார். அவற்றில் விதிக்கப்பட்டவை புண்ணியங்கள். அவர் புண்ணியம் செய்த ஆன்மாக்களுக்கு இன்பத்தையும், பாவம் செய்த ஆன்மாக்களுக்குத் துன்பத்தையும் கொடுப்பார். இதனால் அவரை இரக்கமற்றவர் என்றோ, வன்மையானவர் என்றோ கொள்ள முடியாது. தவறு செய்த பிள்ளையைப் பெற்றோர் தண்டித்தலும், நோயாளருக்கு வைத்தியர் உடலைக் கீறிச் சிகிச்சை செய்தலும் அவர்களிடத்திலுள்ள இரக்கத்தினாலேயே அன்றி வஞ்சனையால் அல்ல. அவர் செய்வது எல்லாம் நன்மைக்கே!

மரம், தன் உயிரை வருத்திப் பாதுகாப்பதுபோல பிற உயிர்களையும் வருத்திப் பாதுகாப்பவன் உயிர்களுக்கெல்லாம் இன்பம் செய்பவனாகிய இன்பமே வடிவான இறைவன்.

இங்கு அப்பர் சுவாமிகளின் இரு தேவாரங்களைக் குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

**நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்**
**நரகத்தி லிடர்ப்படோம் நடலை இல்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்பமில்லை**
**தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான**
**சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்**
**கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்**
**கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே** - **தி 6, பதி 98, பா 1**

**சுண்ணவெண் சந்தனச் சாந்தும்**
**சுடர் திங்கட் சூளாமணியும்**
**வண்ண உரிவை உடையும்**
**வளரும் பவள நிறமும்**
**அண்ண லரண்முரண் ஏறும்**
**அகலம் வளாய அரவும்**
**திண்ணன் கெடிலப் புனலும்**
**உடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை**
**அஞ்ச வருவது மில்லை** - **தி 4, பதி 2, பா 1**

இவ்வாறாக அப்பர் சுவாமிகள் பாடியருளியபடி எல்லாம் அவன் செயல் என்ற நம்பிக்கையுடன் உறுதியாக இருப்போமானால், **"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"** என்று உணர்ந்து என்றென்றும் ஆனந்தமாய் வாழலாம்.

## மாற்றங்கள் தேவையா?

என்ற தலைப்பில், ஆடி, ஆவணி, புரட்டாதி மாதக் கலசம் இதழில் ஆசிரியர் தலையங்கத்தில் முன்வைக்கப்பட்ட கருத்தைக் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள், சமய தத்துவத்தை உணர விரும்புபவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஏனென்றால் சமயம் சம்பந்தமான விடயம் விவாதத்துக்கோ விமரிசனங்களுக்கோ உட்படுத்தப்படுவதன்று. சமயம் மக்களை அறநெறியில், ஒழுக்கத்தில் வழிப்படுத்துகிறது. தவறு செய்வதிலிருந்து தடுக்கிறது. மனிதனை முழுமைப் படுத்துகிறது. இறைவனை அடைய வழிப்படுத்துகிறது. மற்றைய சமயங்களில் இல்லாத அளவுக்கு சைவத்தில் நம்முன்னோர் நமக்கு நூல்களை வழங்கியுள்ளனர். அவற்றுள் சிறிதளவையாவது கற்று உணர்ந்தவர்கள் கேள்வி கேட்கமாட்டார்கள்.

பல்கலைக் கழகத்தில் ஒரு பட்டப்படிப்பு படிக்கவேண்டுமென்றால், முதலில் ஒன்றும் படிக்காது நேரே சென்று படிக்க இயலுமா? அதற்கு முன்பு எத்தனை படிகளைத் தாண்டவேண்டும் என்பது யாவரும் அறிந்ததே! அதுபோல, இறைவனை அடைய, தேடல், அறிதல், உணர்தல், தெளிதல் எனப் பல படிமுறைகள் உண்டு.

இறைவனைக் காண்பதற்கு எமது சமயத்தில் பல்வேறு வழிகள் உள்ளன என்பதற்கு நாயன்மார்கள், அடியார்கள், சித்தர்கள் என்போரின் வாழ்க்கை வரலாறுகள் சான்று பகர்கின்றன.

**தவம்**

# 40 ஆவது ஆண்டு நிறைவில் திருமணங்கள்

சைவ முன்னேற்றச் சங்கம் (U.K) இவ்வாண்டு தனது 40ஆவது ஆண்டை நிறைவுசெய்கிறது. "சைவ சமயக் கருத்தினூடாகச் சமூக சேவை" என்கின்ற நெறிமுறையில் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது. நாற்பது ஆண்டு நிறைவு என்ற முக்கியமான மைல் கல்லைத் தாண்டுவதின் அடையாளமாக, இதுவரை செய்த, செய்துகொண்டிருக்கும் பல உதவித் திட்டங்களில், முதன்மையானதாக, **"நாளைய கனவை நனவாக்கும் நாற்பது"** என்ற நோக்கில் மாபெரும் திருமண விழா ஒன்றை, இலங்கையில் நாற்பது (40) தம்பதியருக்குத் திருமணம் நிகழ்த்தி யுள்ளதன்மூலம், சைவ முன்னேற்றச் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

இந்த மணவிழாபோல இலங்கையில் இதுவரை நிகழவில்லை என ஊடகங்கள் பாராட்டும் வகையில் **பம்பலப்பிட்டி சம்மங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர்** ஆலயத்தில் திருமண விழா சென்ற செப்டெம்பர் மாதம் பதினைந்தாம் திகதி (15.09.2017) நடைபெற்றது. பொருள் வசதிக் குறைவால் திருமணம் செய்ய இயலாது இருந்த தம்பதியினரே தெரிவுசெய்யப்பட்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து 2 தம்பதிகள், முல்லைத்தீவில் இருந்து 8 தம்பதிகள், கிளி நொச்சியிலிருந்து 2 தம்பதிகள், களுத்து றையிலிருந்து 17 தம்பதிகள், மன்னாரிலிருந்து 1 தம்பதி உள்ளிட்ட 40 தம்பதிகள், திருமண விழாவால் பயன்பெற்றனர். தம்பதியினருக்கு ஆடை, கூடவந்த உறவினர்களுக்கு உணவு, தங்குமிட வசதி, திருமண நிறைவில் விருந்து என அனைத்தும் எவ்வித குறையும் இன்றி நிறைவேற்றப்பட்டது.

காலை நேரம். சூரியன் தனது கதிர்களைப் பரப்பி ஒளி வீசி இருளகற்றும் நேரம். பறவைகள் மரங்களிலிருந்து இரைதேடிப் பறந்து வட்டமிட, சம்மங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில், மணக் கோலத்தில், அலங்காரத்தில், அந்தணர்களின் யாக பூசையின் நடுவே வரிசையாக மணமக்கள் அமர்ந்திருந்தனர். அவர்களின் முகங்களில் இன்பமான மலர்ச்சி பூத்து நின்றது. நல்ல நாதஸ்வர ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. அந்தச் சுப முகூர்த்த வேளையில், மணமகளின் கழுத்தில் திருமாங்கல்யத்தை மணமகன் சூட்ட, சூழ நின்றவர்களின் ஆசியுடன், திருமணம் நடந்த காட்சி என்றுமே மறக்க முடியாத ஓர் இன்ப நிகழ்வாகும்.

இந்தத் திட்டத்துக்கு இங்கிலாந்திலுள்ள 95 அன்பு உள்ளங்கள் பொருளுதவி புரிந்தனர். இந்த திருமணத் திட்டத்தை இலங்கையிலே சிறப்பாக நிகழ்த்தத் தேவையான அனைத்து ஒழுங்குகளையும் செய்ய அகில இலங்கை இந்து மாமன்றம் உதவியது. அவர்களுக்கு சைவ முன்னேற்றச் சங்கம் நன்றி நவில்கின்றது.

சங்கத்தின் தலைவர் திரு. சதாசிவம் ஆனந்ததியாகரின் வழிநடத்தலில் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் அனைவரினதும் விடா முயற்சியினால் இந்த 40இல் திருமணம் 40 என்ற மனிதநேய உதவித் திட்டத்தை மிகவும் சிறப்பாக நடத்த முடிந்தது. சைவ முன்னேற்றச் சங்கம் (ஐ.இ) தனது சேவையைக் குறையொன்றும் இன்றி, நெறிவழுவாமல் செய்கிறது என்பதற்கு இந்த விழா ஒரு சிறந்த அத்தாட்சியாகும்.

**மா. இந்துசேகரன்**
**கௌரவ பொதுச்செயலாளர்**

# வித்துவான் வேந்தனார்

## (தோற்றம்: நவம்பர் 5, 1918 - மறைவு: செப்டம்பர் 18, 1966)

**அறிமுகம்:**

இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பெயர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மரபுவழித் தமிழ்ப் புலமையாளர்களுள் ஒருவர். சிறந்த தமிழறிஞராய், சைவசித்தாந்த விற்பன்னராய், ஆசிரியராய், கவிஞராய், சொற்பொழிவாளராய் வாழ்ந்தவர். பத்துப்பாட்டு முதல் பாரதியார் பாடல்கள் வரை ஆராய்ந்து தெளிந்த கட்டுரைகள் எழுதியவர்.

மதுரை தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர் பட்டத்தையும், சைவசித்தாந்த சமாசத்தில் சைவப்புலவர் பட்டத்தையும், சென்னைப் பல்கைலக்கழகத்தில் வித்துவான் பட்டத்தையும் பெற்றவர் வேந்தனார். வாழுங் காலத்திலேயே திருவாவடுதுறை ஆதீனத்தாரால் "தமிழன்பர்" என்ற பட்டமும் (1947), சிறீலங்கா சைவாதீனத்தினரால் "சித்தாந்த சிரோமணி" (1964) என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

வேந்தனார் யாழ்ப்பாணத்து வேலணையிற் பிறந்தவர். கனகசபைப்பிள்ளை, தையல்முத்து அம்மையார் ஆகியோருக்குத் தனியொரு குழந்தையாகப் பிறந்தார். ஆசிரியரான சோ. இளமுருகனாரின் வழிகாட்டலால், பதினாறாவது வயதில் நாகேந்திரம்பிள்ளை எனத் தனது பெற்றோர் இட்ட பெயரினை, வேந்தனார் எனச் சுத்தமான தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டார்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பரேமேஸ்வரக் கல்லூரியில் ஆசிரியராகப் பயிற்சியினைத் தொடர்ந்த காலங்களில், இவர் சந்தித்த பரமேஸ்வரக் கல்லூரியின் அதிபர் கலாநிதி. சிவப்பிரகாசம், சி. சிதம்பரப்பிள்ளை, பண்டிதமணி கி. நவநீதகிருஷ்ண பாரதியார் போன்றோரின் தொடர்புகளும் இவரின் தமிழ்மொழி வளம் பெற உதவின. வேந்தனார் வித்துவான் சோதனைக்குத் தோற்றுவதற்காகத் தமிழ்நாடு சென்றிருந்த வேளை, தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளுடன் சில காலம் தங்கியிருந்தமை அவருடைய தனித்தமிழ்ப் பற்று மேலும் வளரக் காரணமாயமைந்தது.

வித்துவான் வேந்தனார் 1940-1966 வரைப்பட்ட கால் நூற்றாண்டு காலப்பகுதியில், ஈழத்தின் தலைசிறந்த தமிழ் அறிஞர்களில் ஒருவராக மிளிர்ந்து, தனது எழுத்தாற்றல், பேச்சாற்றல், கவித்துவத்திறன் போன்றவற்றால் ஈழநாட்டின் மூலை முடுக்கெல்லாம், ஏன், தமிழகத்தின் பல பகுதிகளிலும் பிரபலமாகி இருந்தவர். வேந்தனார் அவர்கள் இருபது வருடங்களுக்கும் மேலாக பரமேசுவரக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகப் பெரும்பணியாற்றி, எண்ணற்ற மாணவர்க்கு இலக்கிய விருந்தளித்தவர். மேலும் இந்துசமயபாடம், கம்பராமாயண உரை நூல்கள், பாரதியார் பாடல் விளக்கவுரை போன்ற நூல்களை மாணவர்க்கு எழுதி, மாணவ சமுதாயத்துக்கும் ஆசிரியர்க்கும் பெருந்தொண்டாற்றியவர். இவரின் பிரசித்தமான குழந்தைப் பாடல்களான அம்மாவின் அன்பு, பாட்டி, எங்கள் வீட்டுப் பூனை போன்ற பாடல்கள் இலங்கைப் பாடத்திட்டக் குழுவினரால் பாலர் பாடல்களாக வெளியிடப்பட்டுள்ளன. வேந்தனார் 1942-1958 காலப்பகுதியில் தொடர்ச்சியாக தினகரன், ஈழகேசரி, இந்துசாதனம், நாவலன், சுதந்திரன், வீரகேசரி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் நூற்றுக்கணக்கான கட்டுரைகளை எழுதியுள்ளார். வித்துவான் வேந்தனார், அவர் காலத்தில் ஒப்பற்ற பெருஞ் சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தவர் ஆவார்.

**உரையாசிரியர்:**

வித்துவான் வேந்தனார் எழுதிய இந்துசமய நூல், 1952 முதல் 1976 வரை இலங்கையில் க.பொ.த (சாதாரண தரம்) மாணவர்க்குப் பாடநூலாக அமைந்தது. அவர் இறந்து 10 வருடங்களின் பின்பும், அவர் எழுதிய "இந்து சமயம்" பாடநூலாக இருந்தது. பின்பு கல்வித்திணைக்களத்தினரால் பாடத்திட்டம் மாற்றப்பட, 1976 இற்குப் பின் வேறு புத்தகங்கள் உபயோகிக்கப்பட்டன. க.பொ.த (சாதாரணம்), க.பொ.த (உயர்தரம்) நூல்களாக இவர் எழுதிய "கம்பராமாயணம் - கும்பகருணன் வதைப்படலம்", "கம்பராமாயணம் - காட்சிப்படலமும் நிந்தனைப்படலமும்", "கம்பராமாயணம் - மந்தரை சூழ்ச்சிப்படலமும் கைகேயி சூழ்வினைப் படலமும்", "பாரதியார் பாடல்கள் விளக்கவுரை" போன்ற நூல்கள் பயன்படுத்தப்பட்டன.

வேந்தனாரின் எளிய நடையிலான, தெளிவான உரைநூல்களால் மாணவர் சமுதாயமும், ஆசிரியருலகமும் மிகப் பெரிதும் பயனடைந்தனர். அமரர் சொக்கன் அவர்கள், வேந்தனாரின் உரையாசிரியத் தன்மையை இவ்வாறு கூறுகின்றார்:

**"தம் கொள்கைகளை தம்மளவில் கட்டுப்படுத்திக்கொண்டு நல்லாசிரியராகவும், பாட நூலாசிரியராகவும், ஆசிரியர்களுக்கு ஆசிரியராகவும் விளங்கிய வேந்தனாரை தமிழ் சைவக் கல்வியுலகு என்றும் மறக்காது"**

அமரர் இளவாலை அமுது அவர்கள், ஒரு கட்டுரையில், பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

**"பொதுத் தராதரப் பரீட்சைக்கு எனக் குறிப்பிட்டிருந்த இலக்கியப் பகுதிக்கு பல ஆண்டுகளாக உரை எழுதி வந்தவர் வித்துவான் வேந்தனார். பல்லாயிரம் தமிழ் மாணவர் வேந்தனாரின் உரைச் சிறப்பை அறிந்து தமிழ் இலக்கியத்தில் ஆர்வமும் உயர்ச்சியும் பெற அவர் வழிவகுத்தார் எனலாம். அரும்பதவுரை, பொழிப்புரை, தெளிவுரை, இலக்கணக் குறிப்பு, எடுத்துக்காட்டு, வரலாறு, நயம் உரைத்தல் என்பனவாக அவர் குறிப்பிட்டு எழுதிய திரவியங்கள் தேடக் கிடைக்காதவை"**

**வேந்தனாரின் குழந்தைப்பாடல்கள்:**

வித்துவான் வேந்தனாரின் பல்வேறு தகைமைகளில் எல்லோராலும் வியந்து பாராட்டப்பட்டது அவர் எழுதிய குழந்தைப் பாடல்களாகும். இக்குழந்தைப் பாடல்கள், அழகான புத்தகவடிவில், படங்களுடன் மட்டுமல்லாது, 13 பாடல்கள் இனிமையாகத் தமிழகத்துப் பாடகர்களால் பாடப்பெற்று, குறுந்தகட்டில் பதியப்பட்டு "குழந்தை மொழி" என்ற புத்தகத்துடன் இணைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலிலுள்ள 35 பாடல்களும் குழந்தைகளுக்கு மிக மிக உகந்தவையாகும்.

இந்நிலையில் ஒருசில தமிழ் அறிஞர்கள் வேந்தனாரின் குழந்தைப்பாடல்கள் பற்றிக் குறிப்பிட்டவற்றை இங்கு காண்போம்.

இரசிகமணி. கனக. செந்திநாதன் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்:

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில்,

**"காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்**
**கட்டிக் கொஞ்சும் அம்மா**
**பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்**
**பருகத் தந்த அம்மா"**

என்ற பாடலின் அடிகள் ஈழத்தமிழ்ச் சிறுவர் சிறுமியரின் மழலை மாறா வாய்களிலெல்லாம் தவழ்ந்தன.

வெறும் கொஞ்சலிலும் பார்க்கக் குழந்தையின் காலைத் தூக்கித் தாய் தன் கண்ணில் ஒற்றும் காட்சியை நம்முன் கொண்டு வருகிறார் கவிஞர். அதே பாடலில் இன்னொரு அருமருந்தன்ன காட்சியையும் நாம் காண்கின்றேம்.

**"பள்ளிக்கூடம் விட்ட நேரம்**
**பாதி வழிக்கு வந்து**
**துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்**
**தோளிற் போடும் அம்மா"**

வெயில் தகிக்கிறது; பானையிற் சாதம் வேகிறது; கணவன் தோட்டத்திலிருந்து திரும்பும் நேரம். அன்றுதான் சிற்றடிநோகப் பாடசாலைக்குப் போன பையன். அவள் எல்லாவற்றையும் மறந்து "ஐயோ! என் பையன் வெய்யிலுக்குள் நடந்து வரப் போகின்றானே" என்று பாதிவழிக்கு ஓடுகிறாள். பையனோ, புதிதாகப் பள்ளிக்கூடம் போன முசுப்பாத்தியில் அவள் கைக்கு அகப்படாமல் ஓடுகிறான். துள்ளிக் குதிக்கிறான். அவள் அன்பு என்ன செய்கிறது? ஓடிப் பிடித்துத் தோளிற் போடுகிறது. என்ன அருமையான காட்சி இது. வெறும் வார்த்தைச் சேர்க்கையாயிராமல் பல அருமையான காட்சிகளாக "அம்மா" பாடல் துலங்குகிறது.

**அடுத்து, "பாட்டி" பாடலைப் பார்ப்போம்:**

தமிழ்நாட்டுப் "பாட்டி"ப் பாடல்கள் பாக்கு இடிப்பதையும், பிட்டவிப்பதையும், தொண தொணப்பதையும் மாத்திரம் எங்களுக்குக் காட்டுகின்றன. வேந்தனாரின் "பாட்டி" என்ன செய்கிறாள் என்று பாருங்கள்:-

**கோயிலுக்குப் போகும் போது**
**கூட்டிச் செல்லும் பாட்டி**
**கும்பிடுநீ கும்பி டென்று**
**குனிந்து சொல்லும் பாட்டி**
**அப்பா அம்மா அடிக்க வந்தால்**
**அலறித் தடுக்கும் பாட்டி**
**தப்பாய் நானும் பிழைகள் செய்தால்**
**தானே புலம்பும் பாட்டி.**

"கும்பிடு நீ கும்பிடு" என்று குனிந்து சொல்லும் பாட்டியையும், "தப்பாய் நானும் பிழைகள் செய்தால் தானே புலம்பும் பாட்டி" யையும் எழுதச் சாதாரண கவிஞரால் முடியவே முடியாது. ஆழ்ந்த அநுபவமும், நுணுக்கமான பார்வையும், எல்லாவற்றுக்கும் மேலாக மேதைத்தனமும் வேண்டும்.

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா, அவன் பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா" என மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களுக்கு விமர்சனம் போன்று ஒரு பாடல் பாடியுள்ளார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. எத்தனையோ விமர்சனக் கட்டுரைகளால் சாதிக்க முடியாததை நுட்பமாகச் சுருங்கிய வடிவிலே அது எடுத்துக் காட்டுகிறது. அதேபோலத் தங்கத் தாத்தாவின் பாடல்களின் நயத்தை வித்துவான் வேந்தனாரவர்கள் குழந்தைகளுக்கு அறிமுகம்

செய்துவைக்கிறார். அருமையான தொண்டு இது என்றே நம்புகிறேன். பாடலைப் பாருங்கள்.

**ஆடிப் பிறப்புப் பாட்டுப்பாடி**
**அமிழ்தின் சுவையைத் தந்தோன்**
**தாடிக் கிழவன் தங்கத் தாத்தா**
**தமிழைப் பாடிக் கூவாய்.**
**பாலை விற்கும் பாவை அந்தப்**
**பவளக் கொடியின் கதையைக்**
**காலங் கடந்து வாழச் செய்த**
**கவிஞன் என்று கூவாய்**
**ஆடு கதறும் அன்புக் குரலை**
**ஆவி உருகிக் கூவாய்**
**தாடி அறுந்த வேடன் கதையைச்**
**சாற்றிச் சாற்றிக் கூவாய்**

**ஆறுமுகநாவலர் பற்றி:**

**"நல்லூரில் பிறந்தவர், நல்லறிவு மிகுந்தவர்**
**எல்லோர்க்கும் இனியவர் ஈசனையே பணிபவர்"**

குழந்தைகள் எல்லோரும் மிக எளிதில் படித்து விளங்கி இன்புறக் கூடியதாக எல்லாப் பாடல்களும் இருக்கின்றன.

**பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்:**


"பாட்டுக்கள் உரிய உரிய மெய்ப்பாடுகளை என்னுள் வருவித்தன. **நான் என்னை அறியாமலே குதூகலித்தேன்.** குழந்தைகளுக்கென்று பாடிய பாட்டிப் பாடல்கள் சொல்லுந்தரமல்ல; உயர்தரமானவை. சோமசுந்தரப் புலவரின் பாடல்களை எவ்வாறு சுவைத்தேனோ அவ்வாறே வேந்தனாரின் பாடல்களையும் சுவைத்தேன். அந்த முறையில் ஒரு விமர்சனமும் எழுதினேன். **சோமசுந்தரப்புலவருக்கு பின்பு வேந்தனார்** என்று வாழ்த்துச் சொன்னேன்."

சொக்கன் அவர்கள் வேந்தனாரின் குழந்தைப்பாடல்களைப் பற்றி குறிப்பிடுகையில் பின்வருமாறு கூறுகின்றார்:

"சங்க இலக்கியங்கள், காவியங்கள், பிரபந்தங்கள் முதலியவற்றில் தோய்ந்தெழுந்த ஒருவர் அவற்றையெல்லாம் மறந்து குழந்தையாக மாறிக் குழந்தையனுபவத்தோடு பாடல் பாடுவது உண்மையிலேயே மிகுதியும் பாராட்ட வேண்டியதே. **இவ்வகையில் இருபதாம் நூற்றாண்டு ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் வேந்தனாருக்கு முதன்மையான இடத்தைத் தயங்காது அளிக்கலாம்."**

ஈழத்திலும், தமிழகத்திலும், ஏனைய உலகெங்கும் சிதறிக் கிடக்கும் நம் தமிழ் மழலைச் சிறார்கள் தம் வயதிற்கேற்ப "தாம் கண்டு, உணர்ந்து, இரசிக்கின்ற பொருள்களை"ப் பிறமொழி கலக்காத தூய, இனிமையான, எளிமை மிக்க செந்தமிழ் மொழியிலே அன்பையும், பண்பையும், அறிவையும், கருணையையும், அழகுணர்ச்சியையும் ஊட்டுகின்ற இக் கவிதைகளில் கற்று இன்புறுவர்.

**தொகுத்தவர்: சி அற்புதானந்தன்**



உ

# சிவயோகம்
# SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)



## இந்துக் கலாசார மையம்

**128, Aurelia Road, Croydon CRO 3BF**
**Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333**
**Email: sivashakthy@sivayogam.co.uk**

## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்
## Arulmihu London Muththumari Amman Temple

**திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்**

**Temple Opening Times**

காலை:
**08:00 AM to 01:30 PM**

மாலை:
**04:30 PM to 09:00 PM**

செவ்வாய்க் கிழமைகளில் மட்டும்:
**08:00 AM to 09:00 PM**
(முழுநாளும் திறந்திருக்கும்)



**பூஜை நேரங்கள்**

**Pooja Times**

| | | |
|---|---|---|
| 09.00AM | : | காலைப்பூசை Morning Pooja |
| 12.00NOON | : | பகற்பூசை Afternoon Pooja |
| 07.30PM | : | இரவுப்பூசை Evening Pooja |
| 09.00PM | : | அர்த்தசாமப்பூசை Arthajaama Pooja |

அம்பாள் அடியார்களே,

நமது அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் திருக்கோயில் 06.02.2017 திங்கட்கிழமை தொடக்கம் மேற்படி முகவரியில் அபிஷேகமும் பூசைகளுகளும் அடியார்களின் தரிசனமும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

கடந்த 20 வருடங்களுக்கு மேல் வாடகை இடங்களில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டு இருந்த அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் நம் அனைவரின் பிரார்த்தனையின் பலனாக நமக்கெல்லாம் வரம் தர நாம் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பான மிகப் பெரியதொரு கோவில் 128, Aurelia Road, Croydon. CR0 3BF என்ற முகவரியில் அமைய அருள்பாலித்துள்ளாள்.

முதியோர்கள், இளையோர்கள் ஒன்று கூடி உறவுகளை சந்தித்து உரையாட ஓர் இடம், தமிழ், இயல், இசை, நாடகம் வளர்க்க இடம் மற்றும் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட மிகப் பெரிய காணியை சொந்தமாக்கிக் கொள்ள திருவருள் கைகூடியுள்ளது.

பக்தப் பெருமக்கள் அனைவரும் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கிவரும் ஆயிரம் கண்ணுடையாள் இலண்டன் முத்துமாரியம்மனைத் தரிசித்து எல்லா வளங்களும் பெற்று இன்பமாக வாழப் பிராத்திக்கின்றோம்.

**அனைவரும் வருக அம்பாள் அருள் பெறுக!**


Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு.
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.


Quality! Variety!! Satisfaction!!!
Veena's
CASH & CARRY
FRESH FRUITS & VEGETABLES
FROZEN FOODS
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com

## வாசித்துவிட்டீர்களா?

# திருமந்திரம்

தி ரு ம ந் தி ர ம்



## ஓர் அறிமுகம்

தி ரு ம ந் தி ர ம்

சிவத்தமிழ் வழக்கு அறிஞரும்
இலக்கிய வழக்கு அறிஞரும்
சட்ட வழக்கு அறிஞரும்

ஆன

திருவாளர் **செல்லத்தம்பி சிறீக்கந்தராசா** அவர்கள்

இலகு தமிழிலும் எளிய முறையிலும் விளக்கி எழுதிய
**திருமந்திரம் - ஓர் அறிமுகம்**
வெளிவந்து விட்டது!

தொடர்புகளுக்கு
சிறீ அண்ணன்
வித்துவான் வேலன் இலக்கிய வட்டம்
66, Westrow Gardens, Ilford, Essex, IG3 9NF.
Tel : 020 8590 9905

✵ ✵ ✵ ✵ ✵

"திருமந்திரத் திருமுகம் காட்டும் அறிமுக ஆடியாக இந்நூல் அமைகிறது. இந்த அழகிய ஏட்டினை இனிய தமிழில் எழுதிய திறம் வியப்பினும் வியப்பிறந்தற்று."

பத்மசிறீ முனைவர் ஔவை நடராசன்
தமிழ்நாடு

"இப்படியான நூல்கள் எமது இளம் சமுதாயத்துக்கு அவசியம் தேவை என்பதை உணர்ந்து இந்த நூலினை வெளியிட்டு வைக்கும் விழாவினை கொழும்பில் நடத்த நாங்கள் அநுசரணை தருவதில் திருப்தியும் பெருமையும் காண்கிறோம்."

வழக்கறிஞர் திரு கந்தையா நீலகண்டன்
அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர்

# பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நாற்பது திருமண நிகழ்வு




















# Satash Community Care









உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592


**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
www.goshinisshinryukarate.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139

HOWEVER YOU SMILE

# SMILE WITH CONFIDENCE



Come to Bluebell for..

INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION

Book your FREE consultation today!

**Bluebell is a TOP DIAMOND STATUS Invisalign provider.**

If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.



Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Diamond Status Provider, a title which is only held by a privileged few dentists in the UK.

Bluebell®
Dental Practice and Clinic

www.bluebelldp.co.uk

Tel: 020 8500 6789
140 Tomswood Hill,
Chigwell, Essex IG6 2QP

invisalign DIAMOND PROVIDER
0% FINANCE AVAILABLE
YouTube

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஒக்டோபர்(18--10-2017) தொடக்கம் ஜனவரி (14-01-2018) வரை**

| | | |
|---|---|---|
| 18.10.2017 | புதன் | தீபாவளித் திருநாள் |
| 19.10.2017 | வியாழன் | கேதாரகௌரி விரதம் நிறைவு |
| 20.10.2017 | வெள்ளி | கந்தசஷ்டி விரதாரம்பம் |
| 25.10.2017 | புதன் | கந்தசஷ்டி விரதம் நிறைவு |
| 02.12.2017 | சனி | திருக்கார்த்திகை |
| 04.12.2017 | திங்கள் | விநாயகர் விரதாரம்பம் |
| 09.12.2017 | சனி | ஆறுமுகநாவலர் குருபூசை |
| 23.12.2017 | சனி | திருவெம்பாவை ஆரம்பம் |
| 24-12-2017 | ஞாயிறு | விநாயகர் விரதம் நிறைவு |
| 01.01.2018 | திங்கள் | நடேசர் அபிஷேகம் - திருவாதிரை |
| 14.01.2018 | ஞாயிறு | தைப் பொங்கல் |

ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

**“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## Membership Form

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150.00 |
| Town | | | |
| Post code | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam UK and enclose herewith cash/ cheque / Standing Order for £ ..................
Members are entitled to receive our information emails and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Banked Date | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |

# சைவசித்தாந்தம் விளக்கும் உண்மைகள்

-திருமதி சொர்ணமலர் முருகையா

**இக்கட்டுரை, முன்னர் கலசம் இதழில் வெளிவந்த "சைவசித்தந்தம் ஓர் அறிமுகம்" என்ற கட்டுரையின் தொடராக வருகின்றது.**

சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் - இறைவன், ஆன்மா, மலம் - ஆகிய மூன்றும் என்றுமே உள்ளவை என்கிறது. இறைவன் நாமம், உருவம் அற்றவன், எங்கும் நிறைந்தவன், பேராற்றல் உடையவன், தனக்கு மேல் ஒருவன் இல்லாதவன், எண்குணத்தவன் என்றும் சைவசித்தாந்தம் கூறுகின்றது. பசுவும் அநா தியானது. பசு என்று என்ற சொல் ஆன்மாவைக் குறிக்கின்றது. ஆணவமலத்தால் கட்டப்பட்ட நிலையில் நிற்பதால், பசு என்று அழைக்கப்படுகிறது. இது அறிவிக்க அறிவது. அத்தோடு சார்ந்ததன் தன்மையாக விளங்குவது என்றும் கூறப்படுகின்றது. ஆன்மா உடம்பிலிருந்து வேறானது.

பதி என்று அழைக்கப்படும் முழுமுதற் கடவுளாகிய பரம்பொருள் எல்லாவற்றிற்கும் சிவமானவன். பதி அமைதியானவன். அவன் தொழிற்தன்மையால் சங்காரகாரகன் என்னும் பெயரால் சிவன் என்றும் சைவசித்தாந்தம் விளக்கிச் சொல்கிறது. சங்காரம் என்பது அழித்தற் தொழிலைக் குறிக்கின்றது. அழித்தற் தொழிலே படைத்தலுக்கும் காரணமாகிறது என்னும் விளக்க அடிப் படையில் ஒடுக்கம் செய்தலாகிய பரம்பொருளை தலைமைப் பொருளாக விவரிக்கும்.

நாங்கள் காணுகின்ற இவ்வுலகம் தோன்றி, நின்று, அழிகிறது. இது மாயை என்ற காரணப்பொருளில் உள்ளது. மாயையின் காரணமாய் உள்ளதைக் காரியப்படுத்த, செய்வோன் ஒருவன் தேவை. ஆகவே செய்பவன் ஒருத்தன் வேண்டும் என்ற காரணத்தைக் கொண்டு உலகத்தைத் தோற்றுவிப்பவன் பரம்பொருளே என்றும், அவன் படைத்தல் தொழிலைத் தனக்குத் தாக்கம் இன்றிச் செய்வான் என்றும், செயலாலும், பயனாலும் செய்வான் என்றும் சைவசித்தந்தம் கூறுகின்றது. இறைவன் தன் சக்தியால், சங்கற்பத்தின் மூலமாகவே இத்தொழில்களை இயற்றுகின்றான்.

ஆன்மாக்கள் தானாக உடம்பெடுப்பதில்லை. அவர்கள் செய்த வினைப்பயனுக்கேற்ப படைக்கப்படும். உடம்பை படைத்துத் தருபவன் பரம்பொருளே! ஆன்மா உடம்பெடுக்கும்போது அறிவற்ற விளங்காநிலையில் இருக்கும். ஆன்மாவைப் பரம்பொருள் தன் பெருங்கருணை யினாலே படைத்தல் தொழில் செய்து, உடம்போடு சேர்த்துக் கருமம் செய்ய வைத்து அறிவு விளங்கச் செய்கிறார். முழுமுதற் கடவுள் படைத்தல் தொழிலைச் செய்வதற்கு காரணம் இதுவே என்று சைவசித்தாந்தம் கூறுகிறது.

தனு, கரண, புவன போகம் ஆகியவற்றைப் படைத்தல் முதலான தொழில்களுக்கு உட்படுத்தும் நிலையில், காரியம் செய்வோனாக அழித்து ஆக்கும் தலைமைப் பொருளாகவும், உயிர்கள் காரணமாக அதனைச் செய்யும் முழுமுதற் கடவுளாகவும் இறைவன் இருக்கிறான். பதிப்பொருளில் இரு சக்திகள் உண்டு. அவையாவன கிரியா சக்தி, ஞான சக்தி. இவற்றிற்கு வேறாக மாயை பரிக்கிரக சக்தியாவும் உள்ளது. இறைவன் சடமாகிய மாயையிலிருந்து தன்னுடைய இரு சக்திகளாலும் ஐந்தொழில்களையும் புரிகிறான். இறைவன் எல்லாவற்றையும் உள்ளடக்கி இருக்கிறான். எல்லாவற்றிலும் நிறைந்தும் இருக்கிறான். இது எப்படியெனில், "அ" என்ற எழுத்து இன்றி மற்றைய எழுத்துக்கள் எப்படித் தோன்றாவோ, அதைப்போன்று பரம்பொருள் இன்றி வேறு பொருள்கள் தோன்றா. இதன் மூலம் பொருள்களுக்கு வேறாக மட்டும்

அன்றிப் பொருள்களில் நிறைந்தும் இருக்கிறான் எனப்படும். இத்தன்மையில் இணைந்து இருந்தாலும் அவன் வேறான பொருள். அவன் பொருள்களோடு "ஒன்றாயும், உடனாயும், வேறாயும் இருக்கும் அத்துவித நிலையில் அவனே பல சக்திகளாகவிருந்து தாதான்மிய நிலையில் செயற்படுகிறான்" எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது.

இறைவன் உயிர்களுக்காக ஒன்பது படிநிலைகளில் இறங்கிவந்து அருள் செய்கிறான். இது நவபேதம் எனப்படும். அவையாவன சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவம், ஈசன், உருத்திரன். மால், அயன் என்பனவாகும். இது, ஒரே பரம்பொருள் உயிர்கள் காரணமாக வேறுபடுத்திக் கொண்டதாகும். முதல் நான்கும் அருவ நிலையாகவும், இறுதி நான்கும் உருவ நிலையாகவும் நடுவில் இருக்கும் சதாசிவம் அருவுருவ நிலையாகவும் கூறப்படும். சதாசிவநிலையே திருக்கோயில்களில் காணப்படும் "இலிங்க" வடிவமாகும். இதுவே காரணப்பொருளாக நின்று எல்லாவற்றையும் இயக்குகிறது என்கிறது சைவசித்தாந்தம். உயிர்களுக்கு அருளும் பொருட்டு இறைவன் மானுடம் போன்ற பிறவடிவங்களையும் நிறுத்திக் கொள்கிறது.

உலகப் பொருள்களில் இணைந்து நின்று இயக்கும் முதன்மை அடிப்படையில், இறைவன் அட்டமானனன் எனவும் கூறப்படுகிறான். நிலம், நீர், தீ, வெளி, சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டில் அவ்வாறு அமைகிறான்.

இறைவனின் தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என ஐந்தாக விளக்கப்படும். இவை அருளில் ஐந்தொழில்கள் எனவும் அழைக்கப்படும். இறைவன் சச்சிதானந்தன் எனவும் அழைக்கப்படுகிறான். இறைவன் ஏகனாக, "சத்து" என்று மாறாத உள்பொருளாக குறிப்பிடப்படுபவன். சார்பும், தடையும் இல்லாத ஞானம் உடையவனாக "சித்து" எனவும் குறிப்பிடப்பவன். இன்பமாக விளங்கும் ஆனந்தம் எனும் நிலையினன். ஆகவேதான் அவன் சச்சிதானந்தன் என அழைக்கப்படுகிறான்.

தன்னியல்பில் இறைவனுக்கு எண்குணங்களாக கூறப்படும். தன்வயத்தன், தூய உடம்பினன், இயற்கை உணர்வினன், முற்றுணர்வினன், அளவிலாற்றல் உடையவன், இயல்பாகவே பாசங்களில் நீங்கியவன், பேரருளாளன், வரம்பில் இன்பத்தன் என்பனவாகும். பரம்பொருளைச் சிவசத்து எனவும், அருட்சத்து எனவும் சைவசித்தாந்தம் விளக்கிச் சொல்கிறது.

**ஆன்மா - பசு**

ஆன்மா உடம்பிலிருந்து வேறானது. ஆன்மா அல்லது உயிர் பிரிந்தால் உடம்பு பிணமாக மாறுகிறது. உடம்பை இயக்குவது ஆன்மா. இது எனது கை, இது எனது கால் என்று சொல்லும்போது கை, கால், கண், மூக்கு என்று உடம்பிற்கு வேறாக ஒன்று "எனது" என்று சொல்லுகிறது. அதுவே ஆன்மா. இதற்கு பல பெயர்கள் உண்டு. உயிர், சீவன், பசு, அணு என்ற பெயர்களால் சுட்டப்படும். ஆன்மா நிலையானது; அழிவற்றது. உடம்பு அழியுமே தவிர ஆன்மா அழிவதில்லை. அது அநாதயானது; நித்தியப்பொருளாக உள்ளது. ஆன்மா அறிவிக்க அறிவது. ஆன்மா உடம்பெடுக்கு முன்னர் அறிவு ஆணவமலத்தால் மறைக்கப்பட்டு அறியாமையில் உழலும். இறைவன் உயிர்கள் மேலுள்ள கருணையினால், ஆன்மாக்கள் செய்த வினைக்கேற்ப, அறியாமை அகல, பிறவிகளைக் கொடுக்கிறான். ஆன்மாக்கள் பலவாயும் நித்தியப் பொருளாயும் வேறு வேறு பிறப்புகள் எடுத்து அசத்துப் பொருளோடு சார்ந்தும் பின் தன்னை விளங்கிக் கொண்டு சத்துப் பொருளோடு சார்ந்தும் செயல்படும். ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகச் செயல்படும் என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. ஆன்மா ஆணவமல நீக்கத்திற்கு அறியாமை அகல உடம்பெடுத்து தம் செயல்களுக்கேற்ற ஏற்றத்தாழ்வுக்குரிய பிறவிகளைப் பெறுகிறது.

ஆன்மா கருவிகள் இல்லாமல் அறிவு பெறமாட்டாது. மலத்தால் மறைக்கப்பட்டு இருந்த ஆன்மாவிற்கு, ஆணவமலம் நீக்கப்படுவதற்காகத் தரப்பட்டதுதான் தனு கரண புவன போகம் என்பவை. ஆணவமலம்

ஆன்மாவை முற்றாக நீங்குவதில்லை. ஆன்மா இறைவனைச் சாரும்போது ஆணவமலம் மடங்கப்பட்டிருக்கும். ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்றால் அநுபவம் கொண்ட ஆன்மாவின் நிலை சகல நிலை எனப்படும். அந்நிலையில் ஆன்மாவிற்கு "சகலர" என்ற பெயர் உண்டு. ஆணவம், கன்மம் என்ற இரு மலங்களோடு கூடிய ஆன்மா "பிரளையா-கலர்" என்று அழைக்கப்படும். ஆணவ மலத்தோடு மட்டும் இருக்கும் ஆன்மாவை "விஞ்ஞானகலர்" என்று அழைக்கப்படும்.

சகல நிலையில், ஆன்மா ஐந்து வகை அநுபவங்களுடன், ஐந்து இடங்களில் நின்று பெறும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற ஐந்து அநுபவங்கள் உடையது. நனவு அநுபவத்தில் ஆன்மா 35 கருவிகளோடு கூடி நிற்கும். இந்த நிலை அநுபவ நிலை எனப்படும்.

ஆன்மா அறியாமை நீங்க, தான்தான் செயல்களைச் செய்கிறேன் என்ற எண்ணம் நீங்க, இறைவனைச் சாரும். இந்நிலையில் ஆன்மா தான் ஒன்றும் செய்வதில்லை. இறைவனே தன்னைச் செயல்படுத்துகிறான் என்று உணரும். அத்தோடு நன்மையும் தீமையும் அதனதன் பலன்களுக்கேற்ப இறைவனையே சாரும் என்று உணரும்போது முத்திநிலை அடையும்.

சித்தாந்தம் முத்தி அடைவதற்கு முற்றும் துறந்த முனிவராகச் செயற்படவேண்டும் என்று சொல்லவில்லை. அன்பு, கருணை, இரக்கம் மற்றைய உயிர்களையும் தன்னுயிர்போல் பார்த்தல் ஆகிய இவைகளோடு குரு, லிங்க, சங்கம, வழிபாடும் இறைவனை உணரும் வழியென்கிறது. குரு, மானுட சட்டை தாங்கி வந்த இறைவன் என்றும், இலிங்க வடிவம் இறைவனே என்றும், அடியார்கள் வழிபடுதல் முத்தி அடைவதற்கு வழியென என்றும் சித்தாந்தம் கூறுகிறது.

சைவசித்தாந்த உண்மை விளக்கத்தில், "அவனே தானாகிய பெருநெறி" என்று கூறுகிறது. இதுவே சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

ஆணவம் சடப்பொருளாய் இருந்து, ஆன்மாவின் அறிவு முழுவதையும் மறைத்து, அறியாமைப் பொருளாய் இருக்கிறது என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. ஒரே பொருளாகவும் நித்திய பொருளாகவும் ஆன்மாவின் உடனாய் இருப்பது. இதனால் இதற்கு சகசமலம் என்ற பெயரும் மூலமலம் என்ற பெயரும் உண்டு. இதுவே ஆன்மாவை இறைவனை அறியமுடியாமல், அறியாமையால் அறைவனை மறைத்து நிற்பது. ஆன்மாவானது மாயை, கன்மங்களோடு கூடிச் செயற்பட்டுப் பக்குவம் அடைவதற்கு, அதன் மலத்தின் வழிநின்று மோகம் முதலியவற்றை ஏற்படுத்தும் இறையின் சங்கற்ப ஆற்றல் திரோதான சக்தி - "திரோதாயி" எனப்படும். ஆணவம் மட்டுமே இணைந்து நின்று ஆன்மாவைப் பற்றியிருக்கும் நிலை கேவல நிலை எனப்படும்.

## பொன் மொழிகள்

* வானத்திலிருந்து பெய்யும் மழை குறைந்துவிட்டால் உலகில் தான தருமங்களும் குறைந்துவிடும்.
* தூய்மையான உள்ளத்தில் வஞ்சக எண்ணங்களுக்கு இடம் கிடையாது.
* நல்ல குடும்பத்தில் பிறந்தவர்கள் வறுமை நிலையை அடைந்தாலும் தம் மேன்மையான தன்மையை விட்டுக் கொடுக்காது தம்மால் ஆன உதவியைப் பிறர்க்குச் செய்வார்கள்.
* ஆண்டுகள் பலவாக அழுதாலும் இறந்தவர்கள் திரும்பி வரப்போவதில்லை. காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. இறப்பு நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. அதனால் உங்களால் முடிந்த நன்மைகளை மற்றவர்களுக்குச் செய்யுங்கள்.

# ஆறுவது சினம்

**கோபம் அழிவைத் தரும், கோபத்தை அடக்குவது கடினம் என்றெல்லாம் கேட்டிருக்கிறோம். ஔவையும் "ஆறுவது சினம்" என்றார். கோபத்தை அடக்குவதுபற்றி அமரர் தென்கச்சி சுவாமிநாதன் பேசிய விடயம் ஒன்று காதில் விழுந்தது. அதை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி. தென்கச்சி சுவாமிநாதன் நகைச்சுவை-யோடு நல்ல கருத்துக்களை நமக்களிப்பதில் வல்லவர்.**

ஒரு மனவளப் பேராசிரியர் பயணிப்பதற்காக விமான நிலையத்திலே காத்திருந்தார். அவரின் எதிரில் மிக உயர்தர ஆடை அணிந்த, செல்வந்தர் தோற்றத்தில் இருந்த ஒருவர், பொதிகளை ஏற்றும் தொழிலாளியுடன் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார். மிகச் சத்தமாக, கண்டபடி வார்த்தைகளை வீசி, மனம் புண்படும்படி அவனைத் திட்டித் தீர்த்தார். தொழிலாளியோ எல்லாவற்றுக்கும் சிரித்தபடி, சரி, சரி என்று பதிலளித்துக்கொண்டிருந்தான். இப்படியே விவாதம் ஒரு பதினைந்து நிமிடங்கள் வரை தொடர்ந்தது. கடைசியில் திட்டியவர் சலித்து அவ்விடத்தை விட்டு அகன்றார். தொழிலாளியும் அதே பணிவுடன் தன் வேலையைக் கவனிக்கச் சென்றான்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மனவளப் பேராசிரியருக்கு ஆர்வம் அதிகரித்தது. அந்த மனிதர் இவ்வளவு திட்டியும் இந்த ஏழைத் தொழிலாளி எவ்வளவு பொறுமை காத்தான் என்று சிந்தித்தார். கோபத்தை அடக்க அவனிடம் அவ்வளவு பொறுமையா? அவரால் நம்ப முடியவில்லை. அவனை அணுகினார்.

"இந்தாப்பா! நான் ஒரு மனவளப் பேராசிரியர். கோபத்தை அடக்குவது எப்படி (Anger management) என்று பலருக்கும் பாடம் நடத்துபவன். உன்னைப் பார்த்து, உன் பொ-றுமையைப் பார்த்து அதிசயிக்கிறேன். எப்படி நீ இவ்வளவு பொறுமையாக இருந்தாய். உனக்குக் கோபமே வரவில்லையா? உன்னிடமிருந்து நான் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. சொன்னால் எனக்கும் பயன்படும்; என் மாணவர்களுக்கும் பயன்படும். வேண்டுமானால் உனக்குப் பணம் தருகிறேன். கோபத்தை எப்படிச் சமாளித்தாய் என்று எனக்குச் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

அந்தத் தொழிலாளி சிரித்தான். "சார்! அது ரொம்பச் சுலபம். நானும் மனுஷந்தான். எனக்கும் கோவம் ரொம்ப வரும் சார்; அந்த ஆளு திட்டிறப்போ ரொம்ப வந்துது. ஆனா, ஒவ்வொருத்தருக்கும் கோபத்தைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு வழி உண்டு சார். அவர் அவர் வழிலை என்னைத் திட்டினார். நான் என்வழிலை கோவத்தை கையாண்டேன். அவ்ளோதான்" என்றான்.

பதிலைக்கேட் பேராசிரியர் மேலும் வியந்து, "அதைத்தானய்யா எப்படீன்னு நான் கேக்கிறேன்" என்றார்.
தொழிலாளியின் பதில் பேராசிரியரைத் திகைக்க வைத்தது.
அவன் சொன்ன பதில்,

**"என்னைத் திட்டின அந்த மனுஷன் யப்பான் போறார். அவர் லக்கேஜை நான் அமெரிக்கா போற ப்ளைட்லை போட்டிருக்கேன். அவர் அவர்வழிலை போறார்; நான் என் வழிலை போறேன்"**

# Hinduism in search of Answers.........

Compiled by S Atputhananthan

## PILGRIMAGE

**Why do people go on Pilgrimage?**
A routine daily life in this humdrum world generates boredom very soon. Undertaking Pilgrimages on such occasions will reinvigorate the mind, in the same way as recharging a battery that is rundown. How can a place of Pilgrimage contribute to this? No doubt, God exists everywhere, but He is Manifest more tangibly in these places of Pilgrimage, even as milk is drawn through the udder, though it permeates the entire body of the cow in a subtle form.

We have hundreds of such pilgrim centres spread all over the land. Usually they are situated in a beautiful natural location like the seashore, the bank of a river, the foot or the top of a hill, in a valley or inside a forest. Very often they are associated with saints and sages or with important spiritual and religious events. Visited by millions of devout, Pilgrims over hundreds of years, they will have acquired a spiritual charge and aura, which will naturally affect those that visit them with faith and fervour. It is believed that they contribute to the lessening, if not the destruction, of our sins. That is why Pilgrimage has been advocated practically in all the religions of the world.

Pilgrimage falls into the third category of ritual - KAMYA – Highly desirable but optional (The other two are NITYA – that occurs everyday: offering water to sun, performing puja/prayers at home, and NAMITTIKA – certain times of year: such as celebrations and festivals.)
People believe going on pilgrimage and experiencing the physical hardships that are necessary to reach the destination enhances the spirituality. It may include climbing hills and walking a long path.


Bathing in pool or holy river is believed to cleanse the spirit of sinful thoughts / actions, and thus increase spirituality and accumulate 'PUNYA' – religious merit.

**What are the holy places, that Hindus go to on pilgrimage?**
There are numerous holy places in India. Some of them are listed below.
**Char Dhams (Four Abodes of God)**




**1.Badrinath (Vishnu Temple)**

Long time ago, this place was filled with berry trees. In Sanskrit language berries are called "badri", so the place was named Badrika-Van, i.e. the forest of berries. It was therefore called Badri-Nath i.e. the Lord of Berry forest.




**2.Puri (Vishnu Temple)**

Puri located in the eastern state of Odisha.




**3.Dwaraka (Vishnu Temple)**

Dwarka located in the west is in the state of Gujarat, India.
Lord Krishna made Dwarka his residence instead of Mathura, his birthplace.




**4.Rameshwaram (Shiva Temple)**

Rameswaram located in the South Indian state of Tamil Nadu. It is situated in the Gulf of Mannar, between India and SriLanka. Lord Rama built a Shiva-Lingam here and worshiped it to get the blessings of Lord Shiva. The Name Rameshwaram means "Rama's Lord".The presiding deity here is in the form of a Linga with the name Sri Ramanatha Swamy. It also is one of the twelve Jyotirlingas.



**Chota Char Dhams of Uttarkhand (Four Abodes of God – Shorter circuit):**






1. **Badrinath (Vishnu Temple)**




2. **Kedarnath (Shiva Temple)**



### 3. Gangothri (Shakthi Temple)

The river Ganga originates at Gaumukh from the Gangotri glacier which is some 18 km from the town of Gangotri.



### 4. Yamunothri (Shakthi Temple)

This is where the second most holy of river of India, the River Yamuna, originates.



**Seven sacred rivers :**





1. **Ganges ( Most sacred at Hardwar, Varnasi or Allahabad)**
2. **Yamuna**
3. **Saraswati–(an underground river)**
4. **Sindhu – (Indus)**
5. **Narmada**
6. **Godavari**
7. **Kaveri**


The **Ganges**, originates in the Himalayas at Gaumukh flowing into the bay of Bay of Bengal is the most sacred river of India and the longest river in India.



The **Yamuna** originates form Yamunotri in the Himalaya Mountains and merges with the Ganges at Triveni Sangamam, in Allahabad, the site for the Kumbha Mela. Lord Krishna's birth place Gokulam and Mathura cities are on the bank of this river. The famous Taj Mahal is situated on the bank of the Yamuna in Agra.





**Saraswati** is an ancient river that flowed in northern India during the vedic era. Although the river does not have a physical existence today, the Triveni Sangamam in Allahabad is a confluence of 3 rivers, the Ganges, Yamuna, and Saraswati, which is said to flow underground.




The **Indus River** flows from Tibet, in the vicinity of Mount Kailash and **Lake Manasarovar,** into Jammu and Kashmir (India) and the rest of Pakistan. It was the birthplace of the early Indus Valley civilization. The river gave its name to the country India.



Originating from the Maikala ranges at Amarkantak in Madhya Pradesh, Narmada flows between the Vindhya and satpura ranges in a southwestern direction finally meeting into the Gulf of Cambay, an inlet of the Arabian Sea.



River **Godavari** originates near Trimbak in Nashik




**Kaveri** River or Cauvery originates from the Brahmagiri Hill in the Western Ghats and flow towards the Bay of Bengal. The river travels along the states Karnataka and Tamilnadu in the southeastern direction.



(To be continued)

# கண்ணனும் தாத்தாவும்



- முத்து -

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற கச்சியப்பர் வாக்கு இன்று வெற்றி கரமாக நிறைவேறிக்கொண்டிருக்கிறது. உலகில், தமிழர்கள் எங்கெல்லாம் வாழுகின்றார்களோ, அங்கெல்லாம் கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டுவிட்டன. நித்திய பூசைகள் முறைப்படி நடை பெறுகின்றன. அதேபோலத் தேர்த்திருவிழாக்களும் வருடந்தோறும் நடைபெறுகின்றன. சித்திரை மாதம் ஆரம்பித்து, ஆவணி மாதம் வரை ஒவ்வொரு கோயிலாகக் கொடியேறி, தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. கோயிலுக்குப் போகமுடியாதவர்களுக்கு வீட்டிலிருந்தே எல்லாக் கோயில் திருவிழாக்களையும் தொலைக்காட்சியில் பார்க்கும் வசதியும் இப்போது வந்துவிட்டது. கண்ணனும் தாத்தாவும் பக்கத்திலுள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் நடைபெற்ற திருவிழாக்களைப் பார்த்து, தரிசித்து மகிழ்ந்தனர். ஏனையவற்றைத் தொலைக்காட்சியில் பார்த்து இரசித்தனர். நல்லூர்த் திருவிழாவைத் தவறாது பார்த்தனர். ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வாகனங்களில் சுவாமி வீதிவலம்வருவது கண்கொள்ளாக் காட்சி.



**கண்ணன்:** தாத்தா! நீங்கள் ஊரில் இருந்தபோது நல்லூர்த்திருவிழா எல்லாவற்றையுமே நேரிலே பார்த்திருப்பீர்கள். இல்லையா?

**தாத்தா:** எல்லா நாள்களும் போகாவிட்டாலும் முக்கியமான திருவிழாக்களுக்கு என் நண்பர்களுடன் சயிக்கிளில் போயிருக்கிறேன். கைலாயவாகனம், சப்பறம், தேர் மிகவும் முக்கியமான திருவிழாக்கள். இரவில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் சுவாமி வீதிவலம் வருவது (கோயிலைச் சுற்றி வருவது) அற்புதமான காட்சி.

**கண்ணன்:** வேறு கோயில்களுக்கும் போவீர்களா?

**தாத்தா:** ஆமாம் கண்ணா! யாழ்ப்பாணத்தில் சில கோயில்கள் மிகவும் பிரபலமானவை (Famous) மானிப்பாய் மருதடிப்பிள்ளையார், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், செல்வச்சந்நிதி முருகன் கோயில், நயினாதீவு நாகபூஷனி அம்மன் கோயில் அவற்றுட் சில. இந்தக் கோயில்களுக்கு எல்லா ஊர்களிலிருந்தும் பக்தர்கள் வருவார்கள். இப்போது இலண்டனில் நடைபெறுவதைப்போல எல்லாக் கோயில்களிலும் கொடியேறித் தேர்த்திருவிழாக்கள் நடைபெறும். இரவு நேரங்களில் பாட்டுக்கச்சேரி, நாதஸ்வரக் கச்சேரிகள் நடைபெறும். சிறுவர்களுக்கும் குதூகலமாக இருக்கும்.

**கண்ணன்:** அதென்ன தாத்தா அப்படிச் சந்தோஷம்? கோயிலுக்கு மக்கள் கும்பிடத்தானே போவார்கள்?

**தாத்தா:** கோயிலைச் சுற்றி வீதிகளில் பலவிதமான கடைகள் இருக்கும். கடலை வறுத்து விற்பார்கள். ஐஸ்கிறீம், இனிப்பு, மிட்டாய், முறுக்குவகை எனப் பல தின்பண்டங்கள் (Snacks) விற்பார்கள். பொம்மை, விளையாட்டுச் சாமான்கள் எனப் பலவிதமான பொருள்கள் விற்பார்கள். பெற்றோர்களும் பிள்ளைகளும் தமக்குப் பிடித்தவற்றை வாங்குவார்கள். அதனால் சிறுவர் சிறுமியர்க்கு ஒரே கொண்டாட்டந்தான்.

**கண்ணன்:** அப்படியா தாத்தா? கேட்கவே சந்தோஷமாக இருக்கறது. இப்போது நாங்கள் ஸ்ரீராமையும் தாத்தாவையும் அழைத்து இதைப்பற்றிச் சொல்வோமா?

**தாத்தா:** அதற்கென்ன கண்ணா! கூப்பிடு பார்க்கலாம். அவர்களுடன் பேசிப் பல நாள்கள் ஆகிவிட்டன. இங்குள்ள கோயில் திருவிழாக்களுடன் எங்களுக்குப் பொழுது போய்விட்டது.

**கண்ணன்:** ஓம் தாத்தா! நீங்கள் சொல்வது சரிதான். இதோ, அவர்களை ஸ்கைப்பில் அழைக்கிறேன்.

(கண்ணன் கணினியை இயக்கி ஸ்கைப்பில் அவர்களை அழைக்கிறான். மறுபக்கத்தில் ஸ்ரீராமும் தாத்தா சிவகுமாரும் வருகிறார்கள்)

**ஸ்ரீராம்:** வணக்கம் கண்ணா! தாத்தா! We just talked about you

**கண்ணன்:** எங்கே, அதைத் தமிழிலே சொல் பார்க்கலாம்.

**ஸ்ரீராம்:** ஓ! மன்னிக்கவேணும், நானும் தாத்தாவும் உங்களைப்பற்றித்தான் இப்போது பேசிக்கொண்டிருந்தோம்.

**சிவகுமார்:** ஆமாம் கண்ணா! நாங்கள் உங்களுடன் பேசி பலநாளாகிப்போச்சு என்று சொல்லவும் நீ ஸ்கைப்பில் அழைக்கும் சத்தம் கேட்டது.

**தாத்தா:** இதுதான் உண்மையான நட்பு சிவகுமார்! எப்படிச் சுகம்? கோடை விடுமுறை

எல்லாம் எப்படிப் போச்சு?

**சிவகுமார்:** நாங்கள் ஐரோப்பிய நாடு (நுரசழிந) சிலவற்றுக்கு ஒரு சுற்றுலாப் போய் நேற்றுத்தான் வீடு வந்தோம்.

**கண்ணன்:** ஸ்ரீராம்! நீ எங்கே போனாய், என்ன பார்த்தாய் என்பதைத் தமிழிலே சொல் பார்க்கலாம்!

**ஸ்ரீராம்:** நாங்கள் ஐரோப்பாவில் பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளுக்குப் போய் இடங்கள் சுற்றிப் பார்த்தோம். எங்கள் உறவினர்களையும் சந்தித்தோம்.

**கண்ணன்:** கெட்டிக்காரன், உனக்குத் தமிழ் நல்லாப் பேசவருவதைக் கேட்க சந்தோஷமாக இருக்கு.

**ஸ்ரீராம்:** தாத்தா என்னனுடன் இப்போது தமிழிலேதான் பேசுகிறார். அதனாலே நான் அங்கே சந்தித்த உறவினர்களுடன் தமிழிலே பேச முடிந்தது. அங்கே சிலருக்கு ஆங்கிலம் தெரியாது. எனக்கு அவர்களின் பாஷை தெரியாது.

**தாத்தா:** தமிழ் படித்த பலன் அப்போ உனக்குக் கிடைத்துவிட்டது.

**சிவகுமார்:** உண்மைதான். இல்லாவிட்டால் ஸ்ரீராமுக்கு அங்கே bore அடித்திருக்கும். அங்கே பிள்ளைகள் எல்லோரும் நல்ல தமிழ் பேசுகிறார்கள். போனதனால் இன்னும் அதிகம் தமிழ் பேச ஸ்ரீராம் கற்றுக்கொண்டான்.

**கண்ணன்:** அங்கே ஏதாவது கோயிலுக்குப் போனீர்களா?

**ஸ்ரீராம்:** நாங்கள் மூன்று கோயில்களுக்குப் போனோம்.

**கண்ணன்:** அப்படியா? என்னென்ன கோயில்கள்?

**சிவகுமார்:** சுவிற்சர்லாந்தில் சுப்பிரமணியர் கோயில். ஆற்றுக்குப் பக்கத்தில் உள்ள அழகான கோயில். ஜேர்மனியில் அம்மன் கோயில் என்று நினைக்கிறேன். பிரான்ஸில் பிள்ளையார் கோயில்.

**கண்ணன்:** பிரான்ஸ் பிள்ளையார்கோயில் தேர்த் திருவிழாவை நாங்களும் டெலிவிஷனில் பார்த்தோம்.

**ஸ்ரீராம்:** நாங்கள் அந்தத் தேரைப் பார்க்கப் போயிருந்தோம் கண்ணா

**கண்ணன்:** இலண்டனில் நான் பார்த்த தேர்த்திருவிழா பற்றி உனக்குச் சொல்லவேண்டும் என்று நினைத்திருந்தேன். நீயும் தேர்த்திருவிழா பார்த்ததைக் கேட்கச் சந்தோஷமாக இருக்கிறது.

**சிவகுமார்:** ஆமாம் கண்ணா! பாரிஸில் லாச்சப்பல் என்ற இடத்தில் உள்ள பிள்ளையார்

கோயில் தேர்த் திருவிழாவுக்கு நண்பர் ஒருவர் எங்களைக் கூட்டிச் சென்றார். நாங்கள் சுவாமி தேரில் வருவதைப் பார்த்துப் பரவசமானோம். ஸ்ரீராமுக்கும் பெற்றோருக்குமே இது ஒரு புது அநுபவம்.

**தாத்தா:** ஆகா! கொஞ்சம் கொஞ்சமாக நீங்களும் சமயத்தைப்பற்றி அறியக் கடவுள் சந்தர்ப்பம் தருகிறார்.

**சிவகுமார்:** உண்மைதான். அளவிடமுடியாத பக்தர் கூடடம். கர்ப்பூரச் சட்டிகள் தூக்கிய பெண்கள் கூட்டம், பஜனைக் கூட்டம், வழிநெடுக உணவு கொடுத்தார்கள், குளிர்பானம் கொடுத்தார்கள். அதைச் சொல்ல ஒரு நாள் போதாது. ஸ்ரீராம் பல கேள்விகள் கேட்டான் பின்னர், தானே கண்ணனின் தாத்தாவிடம் கேட்கலாம் என்று சமாதானம் சொல்லிக்கொண்டான்.

**கண்ணன்:** ஸ்ரீராம்! இப்படியயொரு தேர்த்திருவிழா பார்த்தது உனக்கு எப்படி இருந்தது?

**ஸ்ரீராம்:** It was amazing. எனக்கு எப்படி அதை describe பண்ணுவதன்று தெரியவில்லை.

**கண்ணன்:** அடுத்த வருடம் நீங்கள் எல்லோரும் இலண்டனுக்கு வரவேண்டும். அப்போது, எங்கள் கோயில்களில் நடக்கும் திருவிழாக்களைப் பார்க்கலாம்.

**சிவகுமார்:** நாங்கள் எல்லோருமே ஸ்கொட்லாண்டை விட்டுவிட்டு, இலண்டனிலே வந்து குடியேறலாம்போல இருக்கிறது.

**தாத்தா:** ஆமாம் சிவகுமார். இப்போது இலண்டனில் எங்கள் ஊர்போலவே கோயில்கள், தமிழ்ப் பள்ளிக்கூடங்கள், கலை வகுப்புக்கள், பலவித கடைகள் என்று எல்லாமே இருக்கின்றன. சொல்லப்போனால் எங்களூரிலே கிடைக்காதவைகூட இங்கே கிடைக்கின்றன. முப்பது வருஷங்களுக்கு முன் இலண்டனும் உங்கள் ஊர்போலத்தான் இருந்தது.

**சிவகுமார்:** முன்பைவிட இங்கும் பல மாற்றங்களைக் காணமுடிகிறது. ஆனால் இங்குள்ள மழையையும் குளிரையும் எல்லோரும் விரும்பமாட்டார்கள்.

**தாத்தா:** ஸ்ரீராம்! நீ ஏதோ கேள்வி கேட்கப்போவதாக உன் தாத்தா சொன்னார். எனக்குப் பதில் தெரிந்தால் சொல்கிறேன். கேள் பார்ப்போம்.

**ஸ்ரீராம்:** நிறையப் பூக்களால் சுவாமியை அலங்கரித்திருந்தார்கள். எவ்வளவோ பூக்களால் அருச்சனை செய்கிறார்கள். பார்க்க நன்றாக இருக்கிறது. ஆனால் எல்லாப் பூக்களும் விரைவாக வாடிவிடுமே. மரத்தில் இருந்தால் அதிக நாள்கள் வாடாமல் இருக்குமல்லவா? அதைத்தான் நான் நினைத்தேன்.

**தாத்தா:** உலகத்தில் மிக அழகானது எது ஸ்ரீராம்?

**கண்ணன், ஸ்ரீராம்:** பூக்கள்தான் தாத்தா, சந்தேகமே இல்லை.

**தாத்தா:** பூக்களைப் படைத்தவர் யார்?

**ஸ்ரீராம்:** கடவுள்தான்.

**கண்ணன்:** அந்த அழகான பூக்களைப் படைத்த கடவுளுக்கு நன்றி சொல்ல நாங்கள் பூவால் அலங்கரித்து அருச்சனை செய்து வணங்குகிறோம். அது மிகவும் பொருத்தமானது. அது எப்டியென்றால், அம்மா தன் குழந்தைக்குப் பாசம் மிகுதியால் எப்படியெல்லாம் அலங்கரித்துப் பார்ப்பாரோ, அதேபோல ஆண்டவன் மீதுள்ள பக்தியால் அடியார்கள் ஆண்டவனை அலங்கரிக்க ஆசைப்படுவார்கள். ஸ்ரீராம்! தாத்தா எனக்குச் சொல்லித்தந்ததை நான் உனக்குச் சொல்கிறேன்.

**தாத்தா:** மறக்காமல் நினைவில் வைத்திருக்கிறாய். கெட்டிக்காரன். ஸ்ரீராம், கண்ணன் சொன்னது உனக்குப் புரிந்ததுதானே!

**சிவகுமார்:** விளங்காவிட்டால் என்னிடம் திருப்பிக் கேட்பார். இன்று எவ்வளவோ விஷயங்களைப் பகிர்ந்துகொண்டோம். மீண்டும் விரைவில் பேசுவோம்.

**தாத்தா:** ஆமாம் இன்று நீண்ட நேரம் பேசிவிட்டேம்.

**கண்ணன்:** மீண்டும் விரைவில் பேசுவோம் ஸ்ரீராம், தாத்தா வணக்கம்

**ஸ்ரீராம்:** ஓம் நிச்சமயமாக - வணக்கம்

# திருநகரங் கண்ட படலம்

(திருவிளையாடற்புராணம்)

தனஞ்சயன் என்றொரு வணிகன் குலசேகர பாண்டியனின் நகரமாகிய மணவூரில் வாழ்ந்து வந்தான். அவன் ஒருநாள் இரவு கடம்பவனத்தில் சொக்கலிங்கப் பெருமானைக் கண்டு தரிசித்தான். தேவர்கள் அங்கு வந்து பூசை செய்தலைக் கண்டு மகிழ்ந்தான். பின்பு அவன் தான் கண்ட அதிசயங்களை நேரில் சென்று குலசேகரப் பாண்டிய மன்னனைச் சந்தித்துக் கூறினான். அதைக் கேட்டதிலிருந்து குலசேகர பாண்டியடியன் அகமகிழ்ந்து சிவபெருமானையே சிந்தித்தபடி இருந்தான். அன்றைய தினம் இரவு சோமசுந்தரக் கடவுள் ஒரு சித்தராக கனவில் வந்து, அவனுடைய கனவில் தோன்றி "அரசே காட்டை வேரோடு அழித்து நகரமாக்குவாய்"என்று சொல்லி மறைந்தருளினார்.

மன்னனும் இறைவன் ஆணைப்படியே சிற்ப வல்லுனர்களைக் கொண்டு அற்புதமான கோயில் ஒன்றைக் கட்டுவித்தான். பின்பு அந்த நகருக்கு சாந்தி செய்ய நினைத்தான்.

அந்தச் சமயத்தில் எம்பெருமான் தன் சடாமுடியில் உள்ள சந்திரக்கலையின் அமிர்த்தைக் கங்கையுடன் கலந்து ஒழுக விட்டார். அது இனிமையான மதுரமான தன்மையாக இருந்ததனால் அந்நகருக்கு மன்னன் மதுரை எனப் பெயரிட்டான். பின் தன் மகனாகி மலையத்துவசனுக்கு முடிசூட்டி, தன் இறைவனின் இனிய திரு வடிகளில் இரண்டறக் கலந்தான்.



# Thirukural stories
# திருக்குறட் கதைகள்

திருமதி சாவித்திரி ஆனந்தன்
Mrs Savithiri Anandan

## வாய்மை - VERACITY

| | |
|---|---|
| அதிகாரம்: 30 | குறள்: 296 |
| **Chapter:** 30 | **Kural:**296 |

பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்

பொய் கூறாமைபோன்று ஒருவனுக்குப் புகழ் தருவது வேறு ஒன்றும் இல்லை. அப்பொய் கூறாமை அவனுக்கு எல்லா அறங்களையும் தரும்.

**Virtue in its course is guarded best by truth; fame is nurtured by abstinence from lies.**

Once, there lived a great king named Arichandran, who never lied and always kept his promise. The God decided to test him and asked sage Viswamitra for help.

Once, while on a hunting expedition, Arichandran heard a woman crying for help. Armed with a bow and arrow, he went in the direction of the sound which was an illusion created by Vignaraja. Vignarajah was trying to disturb Viswamitra's meditation. When he saw Arichandran, he entered the King's body and disturbed Viswamitra's 'Tapasya' and destroyed all the knowledge Viswamitra acquired during Tapasya.

When Arichandran came to his senses, he realised that the Sage was extremely angry with him. He apologised and promised to fulfil any of Sage's needs.Viswamitra demanded dakshina for his Rajasooya Yaha. The king asked what the Sage wanted as dakshina. In response, Viswamitra said, "Give me all that you have except yourself, your wife and your child". Arichandran agreed and let the sage has all his possessions.

When Arichandran was about to leave, Viswamitra demanded more. The King said that he did not have anthing and promised to give the same within a month.

After giving all his wealth, a month passed, and Arichandran arrived in the Holy city of Kasi where Viswamitra was present. To pay the Sage his second instalment, Arichandran sold his wife and child to a Bhramin. Unsatisfied with the amount of wealth he received, the Sage demanded more from Arichandran. This time he took Arichandran as his slave and sold him to a crematarium keeper. Arichandran was employed at the crematarium where his job was to collect money from the people bringing bodies to cremate as tax. He did this with utmost sincererity.

One day Arichandran's wife came to the cemetery, holding the dead body of their son, to cremate. The son had died of snake bite. Arichandran demaned tax from the lady, knowing fully well that she was his wife and the dead body was that of his son. Such was his honesty. The lady did not have any money on her to pay. Seeing Arichandran's honesty, the God appeared in front of them, gave the life back to their son and the wealth he lost.

முன்னொரு காலத்தில் வாய்மை வழி நடப்பவனும், சொன்ன சொல் தவறாதவனுமாகிய அரிச்சந்திரன் என்னும் அரசன் வாழ்ந்திருந்தான். அவனைச் சோதிக்க விரும்பிய கடவுள் விசுவாமித்திரர் என்ற முனிவரின் உதவியை நாடினார்.

ஓருநாள் காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தபோது, ஒரு பெண்ணின் அழுகுரல் உதவி வேண்டி நிற்பது அரிச்சந்திரனுக்கு கேட்டது. அரசன் குரல் வந்த திசை நோக்கி தன் அம்பு வில்லுடன் ஓடினான். அந்தக் குரல் விசுவாமித்திரருடைய தவத்தைக் கலைப்பதற்காக விக்னராசா என்பவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாயை மட்டுமே. அரிச்சந்திரனைக் கண்டவுடன், அந்த அரசனுடைய உடலில் புகுந்து, விசுவாமித்திரருடைய தவத்தைக கலைத்து, அதுவரை முனிவர் பெற்ற தவவலிமை யாவற்றையும் சிதைத்துவிட்டான்.

அரிச்சந்திரன் சுய நினைவிற்கு வந்தபோது, முனிவர் கடும் கோபமடைந்து இருப்பதைக் கண்டு அவரிடம் மன்னிப்புக்கோரி, முனிவர் கேட்கும் எதையும் தான் செய்யத் தயாராக இருப்பதாகக் கூறினான். "என்ன வேண்டும்?" என்று அரசன் கேட்டபோது, தான் மேற்கொள்ள இருக்கும் ராஜசூய யாகத்துக்குத் தட்சணை தரும்படி முனிவர் கேட்டார். "உன்னையும் உன் மனைவி, மகனையும் தவிர மற்ற எல்லாவற்றையுமே எனக்குத் தந்துவிடு" என்றார் முனிவர்.

அரிச்சந்திரன் சம்மதித்தான். அதன்படி, அரண்மனையை விட்டு அவன் வெளியேற ஆயத்தமாகும்போது, முனிவர் மேலும் ஒரு தட்சணை கேட்டார். தன்னிடம் எதுவுமில்லை எனக்கூறிய அரசன், ஒரு மாத காலத்தினுள் அதைச் செலுத்துவதாக வாக்களித்தான். பின் அரசன் காசியைச் சென்றடைந்து, ஏறத்தாழ ஒரு மாதம் ஆகியபோது, ஏற்கெனவே விஸ்வாமித்திரர் அங்கு வந்திருந்தார்; தட்சணையைத் தரும்படி கேட்டார். அரிச்சந்திரன் வேறு வழியின்றித் தனது மனைவியையும் மகனையும் ஒரு முதிய பிராமணனுக்கு விற்றுப் பணம் பெற்றான். அந்தப் பணமும் போதாதநிலையில், முனிவர் அரசனைத் தனது அடிமையாக்கித் தாழ்ந்த சாதி மனிதன் ஒருவனுக்கு அவனை விற்றார்.

இடுகாட்டுக்குப் பொறுப்பாக இருக்கும் பணியில் அரிச்சந்திரன் நியமிக்கப்பட்டான். சுடுகாட்டில் எரிப்பதற்கு ஒவ்வொரு உடலுக்கும் ஒரு தொகைப் பணத்சை செலுத்திய பின்னரே எரியூட்ட அனுமதிக்கப்படும் என்பது அந்தச் சுடுகாட்டின் விதி. பணம் வசூலிக்கும் வேலை அரிச்சந்திரனுக்குத் தரப்பட்டது.

ஒருநாள் பாம்பு கடித்து இறந்துவிட்ட அவர்களுடைய மகனின் உடலைக் கையேந்தியவாறு அவனுடைய மனைவி சுடுகாட்டுக்கு வந்தாள். "எரியூட்டுமுன் பணம் செலுத்த வேண்டும்" என்று, காவற் கடமையில் நின்றவன் சொன்னபோது, அவன் தனது கணவன் என்று கண்ட அரசி சொல்லொணாத் துயரம் கொண்டாள். கடமை தவறாத கணவன் - எரியூட்ட பணம் இல்லாம மனைவி.

கடவுள் வைத்த பரீட்சையில் அரிச்சந்திரன் என்ற என்ற வாய்மையானவன் வெற்றி பெற்றான். கடவுள் விஸ்வாமித்திர முனிவருடன், தர்மத்தின் கடவுள் தலைமையில் அங்கு காட்சி தந்தார். அரிசந்திரன் என்ற வாய்மையாளனை வாழ்த்தி ஆசீர்வதித்தார்கள். இறந்த குழந்தையை மீண்டும் உயிர்பெற வைத்தார்கள்.


வண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 15-10-2017 அன்று வெளியிடப்படுகிறது.